பக்கங்கள்: 12
விலை : 30/-
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 03 புதன்கிழமை 19.08.2020 கதிர் 283

### இது ரகசியம் அல்ல!

தேசியப் பட்டியல் எம்.பி. நியமனம் தொடர்பாக தமிழரசுக் கட்சிக்குள் வெடித்த சர்ச்சை இன்னும் ஓயவில்லை.

அதற்கிடையில்அதற்குத்தாமும் பங்கு கேட்கப் புறப்பட்டு அடுத்த அதிர்வலையை ரொலோ உருவாக்கி நிற்கின்றது. பக்கம்02

# ரணிலுக்குக் கடும் எதிர்ப்பு! ஐ.தே.கவுக்கு மூடுவிழா!!

## பொதுத் தேர்தலில் போட்டியிட்ட பலரும் கட்சியிலிருந்து கூண்டோடு விலக முடிவு

கொழும்பு, ஒகஸ்ட் 19

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் 22 மாவட்டங்களில் போட்டியிட்ட 262 வேட்பாளர்களில் பெரும்பான்மையானவர்கள், கட்சியில் இருந்து கூண்டோடு விலகத் தயாராகி வருகின்றனர் என்று அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியில் தொடர்ந்தும் நீடிப்பார் என்ற தீர்மானத்தை அடிப்படையாக கொண்டே அவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது. பக்கம் 02

## பெண்ணின் கால் எலும்புகளே அகழ்வுப் பணியின்போது மீட்பு




யாழ்ப்பாணம், ஓக 19

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில்உள்ளதனியார்காணியில் பெண் ஒருவருடையது என்று நம்பப்படும் மனித எச்சங்கள் பக்கம் 02

## அரசியல் கட்சிகளை அங்கீகரித்து பதிவதற்கான பரிசீலனை ஆரம்பம்

### 160 விண்ணப்பங்களில் இதுவரை 40 நிராகரிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக. 19

புதிதாகப் பதிவு செய்வதற்காக 160 அரசியல் கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்துள்ள நிலையில் அவை தொடர்பான பரிசீலனைகள் நேற்று முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிய அரசியல் கட்சிப் பதிவுக்காக 160 தரப்புகள் விண்ணப்பித்திருந்த நிலையில் தேர்தல் அறிவிப்பு வெளியானது. இதனால் புதிய கட்சிகளின் அங்கீகார நடவடிக்கை தடைப்பட்டது. தற்போது தேர்தல் முடிவுற்றமையால் புதிய கட்சிகளின் பதிவை அங்கீகரிக்கும் பணியை முடிவுறுத்த தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவற்றின் அடிப்படையில் இதுவரை விண்ணப்பித்த 160 கட்சிகளின் படிவங்கள் பரிசீலிக்கப்பட்டு 40 கட்சிகளின் விண்ணப்பங்கள் பக்கம் 02

## நாடு முழுக்க நேற்று முதல் சுழற்சிமுறை மின்வெட்டு

### நான்கு நாள்களுக்கு நடைமுறைக்கு!

கொழும்பு, ஓக.19

நுரைச்சோலை அனல்மின் நிலையம் செயலிழந்ததை அடுத்து நாட்டில் காலை, மாலை வேளைகளில் சுழற்சி முறையில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதன்படி நாடு முழுவதும் நான்கு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு மாலை 6 மணி தொடக்கம் இரவு 7 மணிவரையும், இரவு 7 மணி பக்கம் 02

## தோல்வியுற்றோரின் பாதுகாப்பு வாபஸ்

கடந்த பொது தேர்தலில் தோல்வியடைந்த 71 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அதிகாரிகளை நீக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் வாரம் முதல் முன்னாள் உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு அதிகாரிகளை பக்கம் 02

## சு.கவுடன் பேசுவதற்கு சஜித் தரப்பில் முயற்சி!

அரச தரப்பின் நடவடிக்கைகளினால் பெரிதும் அதிருப்தியுற்றிருக்கும் அரசுக் கூட்டணியின் பங்காளர்களான சுதந்திரக் கட்சித் தரப்புடன் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினர் பேச்சு நடத்தவிருக் கின்றனர் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த முறை அமைச்சரவையை நியமிப்பதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூத்தவர்களை பின்னால்தள்ளிவிட்டு, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப் பக்கம் 02

### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

## 5 மணி நேரம் ருவானை துருவியது ஆணைக்குழு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் விசாரணை பிரிவில் நேற்று முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன, சுமார் 05 மணிநேரம் குடைந்து விசாரிக்கப்பட்டார். (விவரமான செய்தி 06ஆம் பக்கத்தில்)

## உள்நாட்டு துப்பாக்கிகள் பளையில் மீட்பு

பளை மற்றும் அம்பேகமுவ பகுதிகளில் விசேட அதிரடிப் படையினர் முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கைகளின் போது 6 துப்பாக்கிகள் பக்கம் 02

## தொண்டமானாற்றில் விபத்து குடும்பத் தலைவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக 19

தொண்டமானாறு மூன்று சந்தியில் நேற்று இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தொண்டமானாற்றைச்சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான உருத்திரன் திருவருட்செல்வன் (வயது - 50) என்பவரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சைக்கிளில் பயணித்த குடும்பத்தலைவர் எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் மோதியதில் வீதியில் சரிந்தார். படுகாயமடைந்த அவரை மந்திகை வைத்தியசாலைக்கு பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அது வலுவான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நம்புவதற்கில்லை.

கடந்த பொதுத் தேர்தலின் பின்னரும் இப்படித் தேசியப் பட்டியல் விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பினால் தங்களுக்கு ஒரு வாக்குறுதி அளிக்கப்பட்டதாக ரெலோ கூறிவந்தது. ஆனால் அத்தகைய வாக்குறுதியை அளித்தோம் என்றோ, அதை நிறைவு செய்வோம் அல்லது செய்ய மாட்டோம் என்றோ கடைசி வரை தமிழ்க் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான தமிழரசின் தலைவர்கள் வெளிப்படையாகத் தெரிவிக்கவேயில்லை.

இம்முறையும் அது அப்படித்தான் ஆகும் போல எனக்குப்படுகின்றது.

இன்றைய நெருக்கடி நிலையில் அப்படியும் இல்லாமல், இப்படியும் இல்லாமல் ஒரு வாக்குறுதிக்குத் தலையாட்டி, பிரச்சினையை இரண்டரை வருடங்களுக்குத் தள்ளிப்போட்டே நிலைமையைச் சமாளித்து விடுவார் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன்.

கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியும் தமக்கு வேண்டும் என்று ரெலோவின் தலைமைக்குழு தீர்மானம் நிறைவேற்றி நாளை அந்தக் கோரிக்கையை கூட்டமைப்பு நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் நகர்த்தினாலும் கூட, இன்றைய நிலையில் – இப்போதைய நிலைமையில் – அதில் ஏதும் மாற்றத்துக்கு சம்பந்தன் சம்மதிப்பார் என்று நான் நம்பவில்லை.

அவரைப் பொறுத்தவரை இன்று உடனடியாக எதிர்கொள்ள வேண்டிய பெரிய பிரச்சினை – அல்லது சர்ச்சை – தமிழ்த் தாயகத்தைத் தேர்தலை ஒட்டி எழுந்துள்ள குழு மோதல் சிக்கல்கள் அல்ல, அவற்றையும் தாண்டி, தென்னிலங்கையில் சுனாமிப்பேரலை போல விஸ்வரூபம் எடுத்து, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கும் பௌத்த, சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களை எதிர்கொண்டு, சமயோசிதமாகக் கையாண்டு, தந்திரோபாயமாகக் காய் நகர்த்தி, விடயங்களைத் தமிழர்களுக்குப் பாதகமேற்படாத வகையில் ஒப்பேற்றுவதாகும்.

தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியை – விவகாரத்தை – இந்தப் பின்புலசிரத்தையோடுதான் சம்பந்தன் கையாள்வார்.

ஆகவே, அவரின் தீர்மானமும் அதன் அடிப்படையில் மிக உறுதியானதாக அமையும் என்றே கருத வேண்டியுள்ளது.

★ ★ ★

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், மாவட்ட இணைப்புக் குழுத் தலைவர்கள், அமைச்சர்களின் செயலாளர்கள் நியமனங்கள் எல்லாம் நடந்து முடிந்து விட்டன.

இன்னொரு முக்கிய நியமனம் காத்திருக்கின்றது. எந்நேரமும் அது பற்றிய முடிவு அறிவிக்கப்படலாம். அதில் சிறுபான்மை இனத்தவர்களுக்கும் கூடிய ஈடுபாடு – கவனிப்பு – உண்டு.

அது குழுக்களின் பிரதித் தலைவர் பதவி. நாடாளுமன்றத்தில் சபாநாயகரும், பிரதி சபாநாயகரும் இல்லாத சமயத்தில் சபைக்குத் தலைமை வகிக்கும் பொறுப்பு இவருடையது.

இந்தப் பதவியை வகிப்பவருக்கு ஏறத்தாழ ஒரு பிரதி அமைச்சருக்குரிய ஆளணி அம்பு, பரிவாரங்கள், Back up வாகனங்கள், வசதிகள் எல்லாம் உண்டு.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக – மூன்று நாடாளுமன்றங்களில் – இந்தப் பதவி தமிழர் வசமே இருந்து வந்திருக்கின்றது.

1967 – 1968 இல் எம்.சிவசிதம்பரம் இப்பதவியை வகித்துள்ளார். 1976 – 1977 இல் சி.அருளம்பலம் இப்பதவியில் இருந்துள்ளார். 1944 – 2000 ஆண்டுகளில் ரவூப் ஹக்கீமிடம் இப்பதவி இருந்தது.

2004 – 2010 வரையான அரசில் பதுளை மாவட்ட இ.தொ.காவின் எம்.பியான சச்சிதானந்தம் இரண்டு வருடங்களும், ஜே.வி.பியின் சந்திரசேகரன் நான்கு வருடங்களும் இப்பதவியை அலங்கரித்தனர்.

2010 முதல் 2015 வரை முருகேசு சந்திரகுமாரும், 2015 முதல் 2020 வரை செல்வம் அடைக்கலநாதனும் இப்பதவியில் இருந்தனர்.

மீண்டும் இதனை சிறுபான்மையினருக்கு வழங்க வேண்டும் என்றால், அரசுத் தரப்பில் அங்கஜன் இராமநாதன், சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), அதாவுல்லா ஆகிய மூவரில் ஒருவருக்கு அது கிட்டலாம்.

அது யார் என்பதுதான் கேள்வி.

சில சமயங்களில் அதுவும் பெரும்பான்மையினர் தரப்பு எம்.பி ஒருவருக்கு வழங்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏனென்றால், ராஜபக்ஷக்களின் ஆட்சியில் முக்கிய இடம் பெரும்பான்மை இனத்தவருக்குத்தானே...!

–மின்னல்–

## உள்நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோவில்வயல் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது உள்நாட்டு துப்பாக்கிகள் 5 மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அம்பேகமுவ – கண்டியபிட்டவெள பகுதியில் திங்கட்கிழமை இரவு சூரியவௌ பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பின்போது துப்பாக்கியொன்றுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

சிறிபுர பகுதியைச் சேர்ந்த 40 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இரு சம்பவங்கள் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

## நாடு முழுவக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்கம் இரவு 8 மணிவரையும், இரவு 8 மணி தொடக்கம் இரவு 9 மணிவரையும், இரவு 9 மணி தொடக்கம் இரவு 10 மணி வரையும் எனச் சுழற்சிமுறையில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வார நாள்களில் பகல் வேளையில் முற்பகல் 10 மணி தொடக்கம் 11.45 மணி வரையும், முற்பகல் 11.45 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரையும், பிற்பகல் 1.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.15 மணி வரையும், பிற்பகல் 3.15 மணி தொடக்கம் மாலை 5 மணிவரையும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த நடைமுறை நேற்று ஆரம்பிக்கப்பட்டு நான்கு நாள்களுக்கு நடைமுறையில் இருக்கும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

## தோல்வியுற்றோரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீக்குவதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

எப்படியிருப்பினும் முன்னாள் பிரதமரான ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பை நீக்குவதற்கு இதுவரையில் எதுவித ஆலோசனைகளும் வழங்கப்படவில்லை என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தோல்வியடைந்த உறுப்பினர்களின் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளில் சிலர் தற்போது வரையில் பாதுகாப்பு பிரிவிற்கு திரும்பியுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

## அரசியல் கட்சிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிராகரிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 120 விண்ணப்பங்களும் மேலும் பரிசீலிக்கப்படுகின்றன.

இவ்வாறு பரிசீலிக்கப்படும் 120 விண்ணப்பங்களினதும் பணியை நிறைவு செய்ய ஒரு வார காலம் எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்போது மேலும் பல விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம் எனக் கருதப்படுகின்றது.

இலங்கையில் தற்போது 79 கட்சிகள் பதிவில் உள்ள நிலையில் மேலும் அதிக கட்சிகள் ஒரே தடவையில் பதிவுக்கு உட்படுத்தப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## தொண்டமானாற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச் சென்றபோது வழியில் உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரும் காயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# பதிவு செய்து கஞ்சாவைப் பயிரிட அரசு அனுமதி வழங்க வேண்டும்!

## ஆளும் கட்சியுடன் தொடர்புள்ள பிரபல பௌத்த பிக்கு கோரிக்கை

கஞ்சா பயிர் செய்கைக்கு இலங்கை மிகவும் பொருத்தமான நாடு என்பதால், அதனை அனுமதிப்பத்திரத்துடன் செய்ய தேவையான வேலைத்திட்டத்தை உருவாக்க வேண்டும் என ஆளும் கட்சியுடன் தொடர்புள்ள பிரபல பௌத்த பிக்கு பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்துள்ளார்.

தேசிய மருத்துவ ஊக்குவிப்பு, கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி, சமூக சுகாதார ராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி மருதானையில் உள்ள அமைச்சின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் தன் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். இந் நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே நாலக தேரர் இதனை கூறியுள்ளார்.

கஞ்சா என்பது மருந்து. அதனைப் பயிரிடுவது எமது நாட்டுக்கு மிகவும் சிறந்தது. எமது நாட்டில் விளையும் கஞ்சா மிகவும் உயர்ந்த தரம் கொண்டது.

10 முதல் 15 ஏக்கரில் சட்டவிரோதமாகப் பயிரிடும் கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றி தீயிட்டுக் கொளுத்துகின்றனர். இது மிகப் பெரிய தவறு. எமது நாட்டில் இப்படியான முட்டாள் வேலைகளை செய்கின்றனர். அவற்றை அரசுடமையாக்கி ஆயுர்வேதத் திணைக்களத்திற்கு வழங்கினால் சிறந்தது.

கஞ்சாப் பயிரிடுவதையும் பதிவு செய்து, அனுமதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டத்தை உருவாக்கினால் பெறுமதியானது எனவும் பெங்கமுவே நாலக தேரர் குறிப்பிட்டுள்ளார்.

# சட்ட விரோத மண் அகழ்வைத் தடுக்க இராணுவத்தினரின் உதவி கோரப்படும்

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

சட்ட விரோத மண் அகழ்வைத் தடுப்பதற்கு இராணுவத்தினரின் உதவி நாடப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடலின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் – 'சட்டவிரோத மண் அகழ்வினை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோதிலும் முழுமையாக அதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

கண்டாவளை பிரதேசத்தில் பிரதேச செயலாளரின் நேரடி நடவடிக்கைகளால் இயலுமானவரை அது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் முழுமையாக கட்டுப்படுத்துவதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள வேண்டியதேவை உள்ளது. இவ்விடயம் தொடர்பில் எதிர்வரும் நாள்களில் நடைபெறும் சந்திப்புக்களில் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன' – என்றார்.

## ரணிலுக்கு கடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி நாடு முழுவதும் 2 லட்சத்து 49 ஆயிரத்து 439 வாக்குகளைப் பெற்று ஐந்தாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு வரலாற்றில் படுதோல்வியை சந்தித்தது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர்கள், இந்தத் தோல்விக்கான நேரடி காரணம் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமை மற்றும் அவரது தன்னிச்சையான தீர்மானங்கள் எனவும் கூறியுள்ளனர்.

இந்தநிலையில் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தேர்தலைச் சந்தித்தால், தற்போது கிடைத்துள்ள இரண்டரை லட்சம் வாக்குகள், ஒன்றரை லட்சமாகக் குறைந்து மிக மோசமான நிலைமையை எதிர்நோக்க தாம் தயாரில்லை எனவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## பெண்ணின் கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் ஆடைகள் நிலத்துக்கு அடியிலிருந்து வெளிப்பட்ட நிலையில் அந்தப் பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணியில் கால்களின் எலும்புப் பகுதிகள் மீட்கப்பட்டன.

அந்த இடத்தில் பற்பசை பைக்கெற், பல் துலக்கும் பிறஸ், சீப்பு, பவுடர் பேணி, 3 மேற்சட்டைகள், பாவடை ஒன்று உள்ளிட்டவை துணியிலான கைப்பையில் காணப்பட்டுள்ளன. கால்களைச் சுற்றிய வாறு சேலை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. அவற்றை வைத்து ஒப்பிடும்போது பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு அந்த இடத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

எனினும் நிபுணத்துவ ஆய்வு ஊடாக மனித எச்சங்கள் எந்தக் காலப்பகுதிக்குரியவை என உறுதிப்படுத்தப்பட்டு விசாரணைகளை முன்னெடுத்தே உண்மை நிலைமையைக் கண்டறிய முடியும் என்று பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ நிபுணர் உ.மயூரதன், சட்ட மருத்துவர்கள் மால்மருகன், மயூரன் ஆகியோர் முன்னிலையில் இந்த மனித எச்சங்கள் மீட்கப்பட்டன.

## சு.கவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தும் உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் அதனைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாரபட்சம் காட்டியுள்ள நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலை தற்போது எவ்வாறு உள்ளது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, 19ஆவது திருத்தத்தை ரத்து செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கக் கூடாது என்றும், அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு அதிகாரத்தைப் பறிக்க ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இது தொடர்பாக எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியுடன் கலந்துரையாடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாண வீதி, ஆனைக்கோட்டையில் 3 Rooms, 2 Halls, Kitchen, Attached Bath Room, Car Parking, கூடிய இட வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் / உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது)

0771632529

# மத்திய மாகாணத்தில் பாரிய பத்துப் பால் பண்ணைகள் தனியார் துறையின் பங்களிப்புடன் உருவாக்க ஏற்பாடு

## ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ அறிவிப்பு

கொழும்பு,ஒக.19

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்குள் இந்நாட்டின் பால் உற்பத்தியை நாட்டின் பால் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு மேம்படுத்துவதாகவும், அதை நுகர்வுக்கு அப்பால் ஏற்றுமதி மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு அரசாங்கத்தின் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பால் உற்பத்தித்துறையுடன் தொடர்புடைய அமைச்சர்கள் உள்ளிட்ட அத்துறை சார்ந்த அரச நிறுவன தலைவர்களுடன் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு குறித்து ஜனாதிபதி செயலணி கூடுதல் கவனம் செலுத்தியுள்ளதுடன், அதன்படி உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பாரியளவிலான பால் பண்ணைகள் மற்றும் சிறிய அளவிலான பால் பண்ணைகளை அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

உள்ளூர் பால் தேவை 1200 மில்லியன் லீட்டராகும். தற்போது உற்பத்தி செய்யப்படும் பாலின் அளவு 420 மில்லியன் லீட்டராகும். எஞ்சிய தேவையான பாலின் அளவு 780 மில்லியன் லீட்டர் என்ற போதிலும், திரவப் பால் பயன்பாட்டிற்கு மக்களை பழக்கப்படுத்தினால், மேலும் 400 மில்லியன் லீட்டர் பாலைக் கொண்டு உள்ளூர் தேவையை பூர்த்தி செய்ய முடியும்.

1 கிலோகிராம் பால் மாவை உற்பத்தி செய்வதற்கு சுமார் 8 லீட்டர் திரவ பால் தேவைப்படுகிறது. அதன்படி, 1 கிலோகிராம் பால் மாவிலிருந்து தயாரிக்கக்கூடிய பால் கோப்பைகளின் அளவை விட 8 லீட்டர் திரவ பாலில் இருந்து தயாரிக்கக்கூடிய பால் கோப்பைகளின் அளவு மிக அதிகம்.

பால் விலை, பால் பசுக்களை இறக்குமதி செய்தல், புல்வெளிகளைப் பாதுகாத்தல், மக்காச்சோளம் சாகுபடி செய்தல் மற்றும் அதற்கான நிலம் ஒதுக்கீடு செய்தல், மக்காச்சோளம் சாகுபடியின் வெற்றிக்கு பயனுள்ள விதைகளை இறக்குமதி செய்து உற்பத்தி செய்தல் போன்றவற்றைக் கையாள்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மக்காச்சோளத்தின் உற்பத்தித்திறனை ஒரு ஹெக்டேயருக்கு 3.8 மெட்ரிக் தொன்னிலிருந்து 7 மெட்ரிக் தொன் வரை உயர்த்த வேண்டும்.

அதன்படி, எதிர்வரும் பருவத்தில் பால் பண்ணையாளர்களுக்கு அவசியமான மக்காச்சோளம் பயிரிடத்



தேவையான நிலங்களை விடுவிப்பது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட துறையினருக்கு ஆலோசனை வழங்கினார்.

கொழும்பு, கம்பஹா போன்ற நகர்ப்புறங்களில் தூய்மையான பால் நுகர்வை அதிகரிக்கவும், அதற்கேற்ப பால் சார்ந்த உற்பத்தி துறைகளை அதிகரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த நிகழ்வில் கமத்தொழில் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் இராஜாங்க அமைச்சர்களான ஜானக வக்கும்புர, கனக ஹேரத் மற்றும் அரச அதிகாரிகள் பலர் கலந்துக் கொண்டனர்.

## நீர்கொழும்பு சிறை அதிகாரிக்கு விளக்க மறியல் தொடர்ந்து நீடிப்பு

பணி நீக்கம் செய்யப்பட்ட நீர்கொழும்பு சிறைச்சாலையின் முன்னாள் அதிகாரி அனுருத்த சம்பாயோ உட்பட நால்வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி வரையில் அவர்களை வைக்குமாறு நீர்கொழும்பு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட நிலையில் கடந்த 02ஆம் திகதி குருநாகல் பகுதியில் வைத்து அனுருத்த சம்பாயோ கைது செய்யப்பட்டிருந்தார்.

சிறை கைதிகளுக்கு விசேட வசதிகளை ஏற்படுத்தி கொடுத்த சம்பவம் தொடர்பில் அனுருத்த சம்பாயோ உள்ளிட்ட நான்கு பேருக்கு எதிராக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

## புதிய நிதி அமைச்சரின் ஒப்பத்துடன் 5,000 ரூபா நாணயத்தாள் வெளியீடு



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் நிதி அமைச்சராகப் பதவியேற்ற நிலையில், அதனை குறிக்கும் வகையில் புதிய நிதி அமைச்சரின் கையொப்பத்துடன் ஐயாயிரம் ரூபா நாணயத்தாள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் அலுவலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் மதகுருமாரிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார் என்று பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில், புதிய நிதி அமைச்சின் கையொப்பத்துடன் ஒரு 5,000 ரூபா நாணயத்தாள் வெளியிடப்பட்டது. மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி லக்ஷ்மன் பிரதமரிடம் புதிய நாணயத்தாளை வழங்கி வைத்தார்.

இதேவேளை, செப்டம்பர் 2ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் ஒரு லட்சத்து 50ஆயிரம் வேலை வாய்ப்பு திட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மதிப்பாய்வு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேலை வாய்ப்பு நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கான ஒன்றுகூடல்

### யாழ் பல்கலை மாணவர் ஒன்றியத்தில்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம்,ஒக.19

அரச வேலை வாய்ப்பிற்காக விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்ட யாழ் பல்கலைக்கழக பழைய மாணவர்களுக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பல்கலைக்கழகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக ஐம்பதாயிரம் பட்டதாரிகளை உள்வாங்குவதற்கான வேலைவாய்ப்பில் விண்ணப்பித்தவர்களில் ஊழியர் சேமலாப நிதியினை பெறுபவர்களாகக் காரணம் காட்டி நிராகரிக்கப்பட்ட யாழ் பல்கலைக்கழக பழைய மாணவர்களையே எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு மாணவர் ஒன்றிய கலந்துரையாடல் அறையில் ஒன்று கூடுமாறு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

வேலைவாய்ப்பிற்காக விண்ணப்பித்த ஐம்பதாயிரம் விண்ணப்பங்களில் ஏற்கனவே தொழிலில் இருத்தல், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவராக இருத்தல், பட்டச் சான்றிதழ், பட்டத்திற்கான பெறுபேறுச் சான்றிதழ் இணைக்கப்படாமல் இருத்தல் போன்ற காரணங்களை குறிப்பிட்டு 2 ஆயிரத்து 256 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஞானாசாரரே என்னைக் கடத்தினார் ரத்னசார தேரர் அதிர்ச்சித் தகவல்!

பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் எங்கள் மக்கள் சக்தி கட்சியின் தலைவர் ஆகியோரால் நான் கடத்தப்பட்டேன் என அரம்பேபொல ரத்னசார தேரர் தெரிவித்துள்ளார்.

எங்கள் மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளரான வெதினிகம விமலதிஸ்ஸ தேரர் வசிக்கும் விகாரையில் இருந்த அரம்பே பொல ரத்னசார தேரர், இனந்தெரியாத குழுவினரால் தாக்கப்பட்டார் என அண்மையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த சம்பவத்தில் தாக்குதலுக்கு உள்ளானவர் எனக் கூறப்படுகின்ற அரம்பேபொல ரத்ன சார தேரரே இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

எங்கள் சக்தி மக்கள் கட்சியில் தேசியப்பட்டியல் ஆசனம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினையை மையமாகவைத்தே அண்மையில் நான் கடத்தப்பட்டேன்.

அதாவது, கல கொட அத்தே ஞானசார தேரர் மற்றும் எங்கள் மக்கள் சக்தி கட்சியின் தலைவர் ஆகியோர் என்னைக் கடத்திச் சென்று, துப்பாக்கியால் தாக்கினார்கள்.

அதனால்தான் எனக்கு காயம் ஏற்பட்டுள்ளது. மேலும் கொழும்பில் பல இடங்களில் தடுத்து வைப்பதற்காக, கட்சி செயலாளர்கள் குறித்து விசாரித்தனர்.- என அவர் தெரிவித்துள்ளார்.

நிரந்தர வேலைவாய்ப்பு

வட பகுதியில் இயங்கி வரும் எமது முன்னணி நிறுவனமான NFlash Super Detergent புதிய கிளைகளுக்கான யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களுக்கான புதிய பங்காளர்களை இணைத்துக்கொள்ளும் நேர்முகத் தேர்வு 10முதல் A/L வரை மூன்று மாத பயிற்சியின் போது 15000 வருமானம் பயிற்சியின் பின் 40000/= மேல் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு.
மேலதிக சேவைகள் - EPF, ETF, Medical,
ஆங்கிலம் சிங்களம் கற்பதற்கான வசதி பதவி வெற்றிடங்கள் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.
607a, KKS Road, Jaffna
தொடர்புகளுக்கு - 021 222 2855, 0775521626

கடைகள் வாடகைக்கு தேவை

சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் நகர்ப் பகுதிகளில் கடைகள் வாடகைக்கு தேவை
தொடர்புகளுக்கு - 076 740 3814

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# பலமான நிலையில் ராஜபக்ஷக்கள்

**ராஜபக்ஷக்களின் புதிய அரசு, முன்னர் கற்றுக் கொண்ட பாடங்களில் இருந்து திருந்தி விட்டதா, அல்லது 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற பாணியில் நடைபயிலப் போகின்றதா என்பதைப் பெரும்பாலும் இன்று ஓரளவுக்கு ஊகிக்க – உறுதிப்படுத்திக் கொள்ள – முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

**ஜனாதிபதி, பிரதமர், முக்கிய அமைச்சர்கள் பதவிகள் எல்லாம் முன்னரைப் போலவே ராஜபக்ஷக்களின் குடும்பத்திற்கு உள்ளேயே வந்து விட்டன.**

**இதுதான் 2005 – 2015 'இருண்ட யுக' ஆட்சிக் காலத்திலும் நடந்தது.**

**முக்கிய அமைச்சுக்களை எல்லாம் ராஜபக்ஷக்கள் தம் வசப்படுத்திக் கொண்டு, குடியாட்சியின் பெயரில் முடியாட்சி நடத்தினர்.**

**இராணுவ நடவடிக்கைகள், பாதுகாப்புச் செயற்பாடுகளில் மட்டுமன்றி, ஆட்சி முறை நடவடிக்கைகளிலும் அராஜகமும், அட்டூழியமும், அட்டகாசமும் எல்லை மீற அப்போக்கே காரணமாயிற்று.**

**தமிழர்களின் உரிமைப் போரை ஆயுத முனையில் அடக்கி, அதன் மூலம் தென்னிலங்கைச் சிங்கள மக்களின் மீட்பராகத் தோற்றமளித்த மஹிந்த ராஜபக்ஷ, அதையடுத்து நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில், முன்னர் யாரும் பெற்றிராத பதினெட்டு லட்சம் என்ற மேலதிக வாக்குகளைப் பெற்று தன்னிகரில்லாத் தலைவராக உயர்ந்தார்.**

**ஆனால் அடுத்த ஐந்து ஆண்டுகளில் சுமார் நாலரை லட்சம் மேலதிக வாக்குகளினால், பதவிக் கதிரையிலிருந்து அவரும், அவரது குடும்ப ஆட்சியும் துரத்தியடிக்கப்படுவதற்கு அப்போக்கே காரணமாயிற்று.**

**மீளவும் அந்தப் பழைய ஆட்சிப் போக்குக்கே ராஜபக்ஷக்கள் செல்வார்களாக என்பது பெரும்பாலும் இன்று தெளிவாகி விடும்.**

**கடந்த கால ஆட்சியின் போதும் பல அமைச்சுக்களை ராஜபக்ஷக்களே வைத்திருந்தனர். ஆனால் முதல் தடவையாக மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான போது, அவரது ஆலோசகர் என்ற கோதாவில் உள்நுழைந்த அவரது இளைய சகோதரன் அடுத்த பத்து ஆண்டுகளும் சகல அமைச்சுக்களையும் தானே நேரடியாகக் கையாண்டார்.**

**நாட்டின் நிதி திரளும் சகல அமைச்சுக்களும் ராஜபக்ஷக்களின் கைகளிலேயே சிக்கிக் கிடந்தன. அவற்றைக் கட்டியாளும் உத்தியோகப்பற்றற்ற அதிகாரம் பஸில் ராஜபக்ஷவிடமே இருந்தது.**

**அதனால் நேர்ந்த ஊழல்களும், யுத்த வெற்றி வீரர்களான ராஜபக்ஷக்களை ஐந்து வருடங்களுக்குள் தென்னிலங்கை மக்கள் மறந்து, ஆட்சிப் பீடத்திலிருந்து துரத்தியடிப்பதற்குக் காரணமாக அமைந்தன என்பது மறைக்க – மறுக்க – முடியாத உண்மை.**

**இப்போதும், பாதுகாப்பு, நிதி அமைச்சுக்களில் தொடங்கி பல்வேறு முக்கிய அமைச்சுக்களும் ராஜபக்ஷக்களின் வசமே உள்ளன. அவற்றையும் வெளியில் ஏனையோரிடம் வழங்கப்படும் அமைச்சுக்களையும் முன்னைய நிலைமை போல 'கொண்ட்ரோல் பண்ணி' கையாளும் 'சுப்பர்' அமைச்சராக பஸில் ராஜபக்ஷ, அமைச்சரவைக்குள் நுழைவாரா என்பது பெரும்பாலும் இன்று தெரியவரும் என்று கூறப்படுகின்றது.**

**கோட்டாபய ராஜபக்ஷவின் புதிய அரசின் முதல் அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெறுகின்றது.**

**அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை முற்றிலுமாக மாற்றியமைக்கும் புதிய அரசமைப்புத் திருத்தத்துக்கான (பெரும்பாலும் அது 20ஆவது அரசமைப்புத் திருத்தம் என அழைக்கப்படலாம்) அமைச்சரவைப் பத்திரம் இன்று நடைபெறும் முதல் அமைச்சரவைக் கூட்டத்திலேயே சமர்ப்பிக்கப்படவிருப்பதாகக் கூறப்படுகின்றது.**

**அப்படி 19ஆவது திருத்தத்தை மாற்றியமைக்கும் புதிய அரசமைப்புத் திருத்த ஏற்பாட்டில் – முன்னர் இருந்தமாதிரி – இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக முடியும், அத்தகையோரின் பெயர்கள் கட்சிகள் சமர்ப்பித்த தேசியப்பட்டியல் வேட்பாளர்கள் பட்டியலில் இல்லாவிட்டாலும் புதிய திருத்தம் வந்த பின்னர் (அத்தகையோரின் பெயர்கள்) வேட்பாளர் பட்டியலில் இப்போதும் சேர்க்கலாம் என்பன போன்ற வாசகங்கள் இடம்பெறுமானால் – மீண்டும் 'பழைய குருடி கதவைத் திறபடி' என்ற கதை – பழைய பல்லவி – ஆரம்பித்து விட்டது என்று முழுமையாக நம்பலாம்.**

**அத்தகைய நிலைமை ஏற்படுமானால், நிர்வாக ரீதியிலும் மீண்டும் இருண்டயுகம் உருவாகும் என்ற அச்சம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.**

**முழுமையான நாடாளுமன்றப் பலத்துடன் முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனா *"ஆணைப் பெண்ணாக்குவதைத் தவிர மிகுதி எல்லாம் என்னால் செய்ய முடியும்"* என்றார்.**

**இன்று அதே நிலையில் ராஜபக்ஷக்கள் இருக்கின்றார்கள். விளைவு என்னவாகுமோ? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்...!**

# வியாபார நிலையங்கள் 10 மணிவரை திறப்பு வர்த்தகர்கள் குழப்பமடையத் தேவையில்லை!

## என்கிறார் வணிகர் கழக உப தலைவர் ஜெயசேகரம்

'யாழ்ப்பாணத்தில் இயலுமாக இருந்தால் இரவு 10 மணி வரை கடைகளை திறந்து வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம். வீண் குழப்பங்கள் தேவையில்லை' என யாழ்.வணிகர் சங்கத்தின் உப தலைவர் ஆர். ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், 'கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் வடக்கு மாகாணத்தில் செயற்படும் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள், இலங்கை போக்குவரத்து சபையின் பிராந்திய அத்தியட்சகர்கள் மற்றும் தனியார் போக்குவரத்து சபையின் சங்கத் தலைவர்கள் அழைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது. நாட்டை மீள இயல்பு நிலைக்கு கொண்டு செல்லும் முயற்சியாக யாழ்ப்பாணம் உட்பட முக்கியமான நகரங்களில் இரவு 10 மணி வரை வர்த்தக நிலையங்களை திறந்து வியாபார செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்றும் அவ்வாறான வர்த்தக நடவடிக்கைக்கு ஏதுவாக போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் கவனமெடுப்பதாவும் வடக்கு ஆளுநரால் தெரிவிக்கப்பட்டது.

'இது தொடர்பில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் குழப்பமடையத் தேவையில்லை. நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று தாக்கத்தால் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு வியாபார செயற்பாடும் முடக்கப்பட்டிருந்தது. எனினும் தற்பொழுது கட்டங்கட்டமாக ஊரடங்கு தளர்த்தப்பட்டு சகல செயற்பாடுகளுக்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

'இந்நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் முகமாகவும் நாட்டை மீள வழமைக்கு கொண்டுவருவதற்காகவும் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இந்த அறிவுறுத்தல் இலங்கையின் சகல பாகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

'இது தொடர்பில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் குழப்பமடையத் தேவையில்லை. உங்களால் இயலுமாக இருந்தால் இரவு 10 மணி வரை கடைகளை திறந்து வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

'இதற்கு ஏதுவாக இரவு 10 மணி வரை தனியார் மற்றும் அரசு பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதேபோல், பாதுகாப்பு விடயங்கள் தொடர்பிலும் கூடிய அக்கறை செலுத்தப்படுகின்றது. எனவே, இது தொடர்பில் வர்த்தகர்கள் குழப்பமடையத் தேவையில்லை' என்றார்.

# ஔடதங்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்ய ஏற்பாடு!



கொழும்பு, ஓக.19

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் நாட்டின் ஔடத மருந்து தேவையை பூர்த்தி செய்வதுடன், ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு உற்பத்தியை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி பணிக்குழுவின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சுகாதாரத் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச அதிகாரிகளுடன் அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் ( திங்கட்கிழமை) இடம்பெற்ற சந்திப்பின் போதே பஸில் ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார்.

உள்ளூர் ஔடத தேவையில் 85 வீதத்தினை இறக்குமதி செய்ய அரசாங்கம் ஏற்கனவே பெரும் செலவுகளைச் செய்து வருவதாக சுட்டிக்காட்டிய பஸில் ராஜபக்ஷ, உள்நாட்டு தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ஏற்றுமதி திறனைக் கொண்ட தொழிற்சாலைகளை தனியார் முதலீட்டாளர்களை கொண்டு நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தை செயற்படுத்துவதற்கு ஒரு மகத்தான ஆணையை வழங்கியுள்ள மக்கள், சுகாதாரத் துறையில் ஒரு தெளிவான மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள்.

இந்த மாற்றத்தை ஏற்படுத்த சுகாதார துறையுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதித்துறை தொடர்பான நிறுவனங்களின் உதவியை நாடுவதாகவும் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார். ஆடை ஏற்றுமதி துறையில் முன்னணியில் திகழ்ந்த இலங்கை, அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் ஔடத ஏற்றுமதி துறையில் முன்னணியில் திகழ்வதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன எனவும் பஸில் ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார்.

குறித்த சந்திப்பின்போது சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, ஔடத உற்பத்திகள் வழங்கல்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்னா ஜயசுமனா, சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்க, ஔடத ஒழுங்கு முறை ஆணையத்தின் தலைவர் பேராசிரியர் அசித டி சில்வா, இலங்கை அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்தியர் உத்பல இந்திரவன்ச, அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன குணசேன உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# நல்லூரில் சங்கிலி அறுப்பு தம்பதியர் வசமாக சிக்கினர்

யாழ்ப்பாணம், ஓக.19

நல்லூர் கந்தன் ஆலய தீர்த்த திருவிழாவான நேற்று முன்தினம் தங்கச் சங்கிலிகளை அறுத்த குற்றச்சாட்டில் மட்டக்களப்பைச் சேர்ந்த கணவன் -மனைவி யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நல்லூர் ஆலயத்தின் தீர்த்த உற்சவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. உற்சவத்தில் நல்லூர் கந்தன் தீர்த்தக்கேணியில் தீர்த்தமாடி கொண்டிருந்த போது அங்கிருந்த பக்தர்களிடம் தங்கச் சங்கிலி திருட்டு ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து இரண்டு தங்கச் சங்கிலிகளை மீட்டுள்ளனர் என யாழ்ப்பணாம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கணவன் - மனைவி மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து தங்கச் சங்கிலியை மீட்டுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்

# இரத்தினபுரியில் உதயமானது ‘புதிய தலைமுறை’ அமைப்பு!

## தமிழர்களுக்கு எனத் தனித்துவமாக இயங்கும்



இரத்தினபுரி,ஓக.19

இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழ் இளையோர்கள் ஒன்றிணைந்து புதிய தலைமுறை எனும் அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் தேசியக் கட்சிகள் தமிழர் பிரதிநிதித்துவத்தை திட்டமிட்டு இல்லாமல் செய்யும் நோக்கில் செயற்பட்டு வருகின்றன.

தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை தக்க வைத்துக்கொள்ள பல்வேறு சந்தர்ப்பங்கள் இருந்தபோதிலும் அதற்கான பேரம் பேசும் சக்தி இல்லாம் இருந்து வருகிறது.

கடந்த காலங்களில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியன இணைந்து மாகாண சபை பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொண்ட போதிலும் அந்தப் பிரதிநிதிகள் மக்கள் சார்பாக இயங்கவில்லை என்பது கண்கூடு.

அதேவேளை இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் வாய்ப்பு இருந்தபோதிலும் பெரும்பான்மை கட்சிகளின் சூழ்ச்சி மற்றும் தமிழ் கட்சிகளின் இயலாமை காரணமாக தமிழ்ப் பிரதிநிதித்துவம் பறிபோயுள்ளது.

தமிழ்க் கட்சிகள் இதுவரை காலமும் தோல்வியுற்ற உறுப்பினர்களுக்கே மீண்டும் மீண்டும் சந்தர்ப்பம் அளித்து வருகின்றன. இளையோருக்கான வாய்ப்பு தொடர்ச்சியாக மறுக்கப்பட்டே வருகிறது.

இதனைக் கருத்திற்கொண்டு ஒட்டு மொத்த இரத்தினபுரி தமிழர்களின் குரலாக புதிய தலைமுறை அமைப்பு நேற்று முதல் அங்குரார்ப்பணம் கொள்கிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் கல்விச் சமூகமாக, இளையோராக ஒன்றிணைந்து போட்டியிட்டு இரத்தினபுரி தமிழர்களுக்காக குரல்கொடுக்க பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதே புதிய தலைமுறை அமைப்பின் குறிக்கோள் ஆகும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்க் கட்சிகள், வேறு மாவட்டங்களைத் தளமாகக் கொண்டு, வாக்குக்காகவும் சந்தாவுக்காகவும் மாத்திரமே வெளிவேசத்துடன் இரத்தினபுரித் தமிழர்களை அணுகுகின்றன எனக் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில், நீண்டகால நோக்கத்துடன் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை தக்கவைக்கும் அதேவேளை, இரத்தினபுரி மாவட்ட தமிழர்களுக்கு அவர்களே தலைமைத்துவம் வழங்க வேண்டும் என்ற நோக்கில் இந்த அமைப்பு செயற்படவுள்ளது.

அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருடனும் இந்த அமைப்பு எதிர்காலத்தில் பேச்சு நடத்தவுள்ளதாக அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது.

## மாங்கேணி விபத்தில் இளம் குடும்பஸ்தர் பலி

மட்டக்களப்பு, ஓக. 19

மட்டக்களப்பு - திருகோணமலை வீதி மாங்கேணி பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் மாங்கேணியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

மாங்கேணி பிரப்பையடிமடு பிரதேசத்தில் இருந்து மாங்கேணி கடற்கரையில் மீன் பிடிப்பதற்கு துவிச்சக்கர வண்டியில் சகோதரர்கள் இருவரும் பயணித்துக் கொண்டிருந்த வேளையில் மாங்கேணி புல்லாவி பிரதேசத்தில், திருகோணமலையில் இருந்து வந்து கொண்டிருந்த கார் மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றது என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாக வாகரை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் மாங்கேணி பிரப்பையடிமடு வைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சபாபதி சிவனேஸ்வரன் (வயது 28) என்பவர் உயிர் இழந்துள்ளமையு டன், உயிரிழந்தவரின் சகோதரரான சபாபதி ரவியேந்திரன் (வயது 22) என்பவர் பலத்த காயங்களுடன் வாழைச் சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் வாழைச் சேனை வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது. கார்ச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இவ் விபத்து தொடர்பாக வாகரை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்தோடு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் நேற்று முன் தினம் மூன்று இடங்களில் விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் காயமடைந்த இருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

## சவுதியில் இலங்கையர் உயிரிழப்பு; சந்தேகத்தில் 4இலங்கையர் கைது

*கொழும்பு, ஓக. 19*

*சவுதி அரேபியாவில் இலங்கையை சேர்ந்த ஒருவரை கொன்றதாக சந்தேகத்தின் பேரில் மேலும் நான்கு இலங்கையர்களை சவுதிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*உயிரிழந்தவர் காலி ரத்கம வைச்சேர்ந்த கந்தாகே பிரியந்த (42வயது) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.*

*ஆரம்பத்தில் அவர் சவுதி அரேபியாவின் டமாம் இல் பணிபுரிந்தபோது 15ஆம் திகதி இவர் தற்கொலை செய்து கொண்டார் எனக் கூறப்பட்டது. ஆனால்பின்னர் கொலைச்சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டனர்.*

*இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய் யப்பட்டவர்கள் குறித்த தகவல்களை பெற்று வழங்குமாறு சவுதி அரேபியாவில் உள்ள இலங்கை தூதரகத்தின் தொழிலாளர் ஆலோசகர் மாதவ தேசபிரிய இலங்கை வெளிவிவகார அமைச் சகத் திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.*

## ‘பாம் எண்ணெய்’ என்ற பெயரில் தீங்கு விளைவிக்கும் பொருள்கள்

மரக்கறி எண்ணெய் என்ற போர்வையில் சந்தையில் விற்கப்படும் பாம் எண்ணெயால், இதய நோய் ஏற்பட வாய்ப்புள்ளதாக தொழில் துறை தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் டாக்டர் சிரிமல் பிரேமகுமார எச்சரித்துள்ளார்.

அத்தகைய எண்ணெயின் பல மாதிரிகள் மனித உடலுக்கு ஆரோக்கியமற்ற கூறுகளைக் கொண்டிருக்கின்றமை தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் மேற் கொண்ட சோதனைகளில், கண்டறியப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் இந்த நிறுவனத்திடம் இல்லை என்பதால், நுகர்வோர் விவகார ஆணையத்திற்கு இது தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மரக்கறி எண்ணெய்யாக விற்கப்படும் இத்தகைய எண்ணெய்க்களில் அதிக அளவு டிரான்ஸ் கொழுப்பு அமில அளவு உள்ளது, இது இயற்கை பாமாயில் இல்லை என்றார் அவர்.

எனவே, 'மரக்கறி எண்ணெய்' என விற்கப்படும் எண்ணெய்கள் உண்மையில் வெளிநாடுகளில் உள்ள ஹோட்டல்களில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டு, அவை சுத்திகரிக்கப்படுவதற்கு முன்பு, இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு, பல்வேறு வகையில் விற்கப்படுவதாக டாக்டர் சிரிமல் பிரேமகுமார கூறினார்.

## கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட நான்கு சந்தேக நபர்கள் கைது



*ஒரு கிலோ 900 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த மேலும் நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*ஹொனுபிட்டிய பகுதியில் நேற்று திங்கட்கிழமை இரவு பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே 4 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*அந்த சந்தேகநபர்களிடமிருந்து 2 கார், 1 மோட்டார் சைக்கிள், 6 கைத்தொலைபேசிகள் மற்றும் கஞ்சா விற்பனை மூலம் பெற்றுக்கொண்டதாகச் சந்தேகிக்கக்கூடிய 125,000 ரூபா பணம் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*ஹொனுபிட்டிய, வலஹன்துவ மற்றும் கடவத்தை பகுதிகளைச் சேர்ந்த 40, 30,28 மற்றும் 26 வயதான நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பேலியகொடை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.*

## நாமலின் செயலர் என குறிப்பிட்டவர் கைது!

மகரகம - பமுனுவ பகுதியில் ரயில் பாதைக்கு அருகே ஒரு வீட்டில் வலுக்கட்டாயமாக மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்பு செயலாளர் எனத் தன்னை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட நபர் மகரகம பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

சம்பந்தப்பட்ட நபரின் குரல் பதிவு மற்றும் சில புகைப்படங்கள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளின் போதே சந்தேக நபர் அளுத்கமவில் வசிப்பவர் என அடையாளம் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து குறித்த சந்தேக நபர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

## வெளிவிவகார அமைச்சின் செயற்பாடுகள் விசாரணை நடத்துவதற்கு அரசு தீர்மானம்

வெளிவிவகார அமைச்சில் முன்னெடுக்கப்படும் மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக விசாரணைகளை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சில் சேவையாற்றிய அதிகாரி ஒருவர், இலங்கைப் படையினருக்கு எதிராகச் செயற்பட்டார் என தெரியவந்ததை அடுத்து, அவர் பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது.

அணி சேரா கொள்கைக்குப் பதிலாக கொழும்பில் உள்ள மேற்குலக நாடுகளின் தூதரகங்களுடன் சம்பந்தப்பட்ட நடைமுறைகளைக் கையாண்டனர் என வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சுக்குள் இதுவரையில் நடைமுறையில் இருந்து வந்த மேற்குலக நாடுகளுக்கு சாா்பான நிகழ்ச்சி நிரலுக்கு பதிலாக ஆசிய நாடுகளுடன் ராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தும் நடைமுறை கையாளப்பட உள்ளதாகத் தெரியவருகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir

## நல்லூர் திருவிழாக் காலத்தில் ஒரு கோடியே 50 லட்சம் ரூபா யாழ்.மாநகரசபைக்கு இழப்பு!

### மாநகரசபை உறுப்பினர் லோகதயாளன் தெரிவிப்பு

நல்லூர் மகோற்சவ காலத்தில் யாழ்.மாநகர சபைக்கு 1கோடி 50 லட்சம் வருமானம் கிடைக்கின்ற போது இம்முறை அவ்வருமானம் இழக்கப்பட்டுள்ளதால் மாநகர சபை பெரும் நிதி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதாக மாநகர சபை உறுப்பினர் ந. லோகதயாளன் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் இவ் வருடம் யாழ் மாநகர சபை பாரிய நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. கொரோனா சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாண மாநகர சபைக்கு சொந்தமான சுமார் 349 கடைகளுக்கான இரண்டு மாத வாடகை சலுகையாக சபை அனுமதியோடு விலக்களிப்பு அளிக்கப்பட்டுள்ளது

அதேவேளை இம்முறை நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவ காலத்தில் தற்போதைய கொரோனா சூழ்நிலை காரணமாக கடைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது

நல்லூர் ஆலய உற்சவத்தின் போது யாழ்ப்பாண மாநகர சபைக்கு 1கோடி 50 லட்சம் வருமானம் கிடைக்கின்ற போதும் சபை ரீதியான செயற்பாடுகளுக்காக சுமார் 70 லட்சம் செலவு செய்யப்படுவது வழமை.

எனினும் இந்த முறை நல்லூர் உற்சவ காலத்தில் அனைத்து செலவுகளையும் சபையே பொறுப்பேற்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

ஏனைய துறைகளை எடுத்துக்கொண்டால் சந்தை வருமானம் போன்ற ஏனைய வருமானங்களும் கொரோனா தொற்று அச்சம் காரணமாக குறைந்தளவாகவே சபைக்கு கிடைத்துள்ளது

இவ்வாண்டு பெரும் நிதிநெருக்கடியினை எமது மாநகரசபைக்கு ஏற்படுத்தியுள்ளது இதன் தாக்கம் எதிர்வரும் வரவு செலவுத்திட்டத்தில் தான் வெளிப்படும்.இது தொடர்பில் மாநகர சபை முதல்வர் ஏனைய தரப்பினருடனும் ஆராய்ந்து ஒரு நிர்வாக ரீதியான முடிவுகளை எடுக்கவுள்ளோம் அத்தோடு மேலதிகமாக ஏதாவது நிதி மூலங்களைத் தேடுவதா அல்லது நிலையான சேமிப்பில் இருக்கிற பணத்தை எடுத்து செலவழிப்பதா எவ்வாறு இந்த நெருக்கடியை சமாளிப்பது தொடர்பில் நாம் விரைவில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

# முன்னாள் புலிப் போராளிகள் கூட்டமைப்புடன் இணையவும்!

## அழைக்கிறார் செல்வம்



அரசாங்கம் திட்டமிட்டு முன்னாள் போராளிகளை அச்சத்திற்கு உள்ளாக்கி அவர்களை எந்த ஒரு நடவடிக்கைகளிலும் ஈடுபடாத வகையில் வைத்திருப்பதற்கான நிலையை ஏற்படுத்துகின்றனர். எனவே அனைத்து முன்னாள் போராளிகளும் ஒன்றிணைந்து தனித்துவத் தோடு, நீங்கள் எங்களுடன் இணைய வேண்டும் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்,ரெலோ இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

செல்வம் அடைக்கலநாதன் ஊடகம் ஒன்றிற்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், வெளி நாடுகளில் விடுதலைப்புலிகள் மீண்டும் வருவதற்கான முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அதன் பின்னணியில் இங்கு இருக்கின்ற முன்னாள் போராளிகளை விசாரனை செய்கின்ற வகையில் புலனாய்வுத்துறையினர் விசாரனை என்ற போர்வையில் முன்னாள் போராளிகளின் விவரங்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் கண்டிக்கத்தக்க விடயம். முன்னாள் போராளிகளை மீண்டும் மீண்டும் துன்பப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. முன்னாள் போராளிகளுக்கு ஒரு செய்தியை கூற விரும்புகின்றேன்.

நீங்கள் அச்சப்படத் தேவையில்லை.நாங்கள் உங்களுக்காகக் குரல் கொடுப்போம். அந்த வகையில் நீங்கள் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு இணைந்து செயற்பட வேண்டும்.

நாங்கள் உங்களை இணைத்துக் கொள்ளத் தயாராக இருக்கின்றோம். எனவே இந்தப் பிரச்சி னைகளுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாக இருந்தால், அரசாங்கம் திட்டமிட்டு எமது போராளிகளை அச்சத்திற்கு உள்ளாக்கி அவர்களை எந்த ஒரு நடவடிக்கைகளிலும் ஈடுபடாத வகையில் வைத்திருப்பதற்கான நிலையை ஏற்படுத்துகின்றனர்.

அந்த விடயத்திற்கு ஒரு போதும் நாங்கள் இடம் கொடுக்க முடியாது. எனவே அனைத்து முன்னாள் போராளிகளும் ஒன்றிணைந்து தனித்துவத்தோடு, நீங்கள் எங்களுடன் இணைய வேண்டும்.

கூட்டமைப்பில் உள்ள எந்தக் கட்சிகளுடனும் இணைந்து கொள்ளுவதை தவிர்த்து நீங்கள் தனித்துவமான விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் என வருகின்ற போது அது இன்னும் வலுவுடையக் கூடிய வாய்ப்பு உள்ளது.

எனவே பிரச்சினைகளை நாங்கள் கையாள வேண்டுமாக இருந்தால் பிரிந்து இருக்காமல் ஒற்றுமையாக ஒன்று கூடி எங்களுடன் வந்து இணைந்து கொள்ள வேண்டும். உங்களுக்கு பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது உங்களுடன் நாங்கள் இருப்போம். உங்களுக்காக குரல் கொடுப்போம்.

முன்னாள் போராளிகளை தொடர்ந்தும் அச்சத்திற்கு உள்ளாக்கும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாதுஎனத் தெரிவித்தார்.

## கொள்ளுப்பிட்டி கட்டடத்தில் தீ!

கொழும்பு - கொள்ளுபிட்டி பகுதியிலுள்ள தனியார் பல்பொருள் கட்டடத்தொகுதியொன்றில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

குறித்த தீப்பரவல் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) இரவு ஏற்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது, சம்பவம் அறிந்து அவ்விடத்திற்கு விரைந்த கொழும்பு தீயணைப்பு படையின் 5 வாகனங்கள் தீயை அணைக்க பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் முதலாவது மாடியில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கிய பலரை பொலிஸார் பாதுகாப்பான முறையில் மீட்டுள்ளனர்.

முதல் மாடியில் ஒரு வர்த்தக நிலையத்தில் ஏற்பட்டுள்ள தீப்பரவல் கீழ் தளம் வரையில் பரவியதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது

## ரிஷாத்துக்கு எதிரான விசாரணை நிறைவு!

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக அரச நிதியை தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பாக முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீனுக்கு எதிரான விசாரணைகளை சி.ஐ.டி.யினர் நிறைவுசெய்துள்ளனர்.

விசாரணையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ரிஷாத் பதியுதீன், இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான 222 பேருந்துகளைப் பயன்படுத்தி, ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க புத்தளத்திலிருந்த தனது ஆதரவாளர்களை மன்னாருக்கு அழைத்துச் சென்றமை சி.ஐ.டி.யின் விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த நேரத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சராக இருந்த ரிஷாத் பதியுதீன், 9.5 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான அமைச்சின் பணத்தை செலவிட்டார் எனவும் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புதிய நாடாளுமன்றின் சபைத் தலைவர்களாக தினேஷ், ஜோன்ஸ்டன்

புதிய நாடாளுமன்றத்தின் சபை தலைவர் பதவிக்கு அமைச்சர் தினேஷ் குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

### உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்:

## 5 மணி நேரம் ருவானை துருவியது ஆணைக்குழு



கொழும்பு, ஒகஸ்ட் 19

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதிஆணைக்குழுவின்பொலிஸ் விசாரணை பிரிவில் நேற்று ஆஜரான முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன, சுமார் 05 மணி நேரம் வாக்குமூலம் வழங்கிய பின்னர் அங்கிருந்து வெளியேறினார்.

ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைய, அவர் நேற்று காலை, ஆணைக்குழுவின் பொலிஸ் விசாரணைப்பிரிவுக்கு வருகை தந்திருந்தார்.

இதேவேளை, தற்போது விளக்கமறியலில் உள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவுக்கு நேற்று சிறைச்சாலை அதிகாரிகளினால் அழைத்துவரப்பட்டிருந்தார்.

## 12 ஆயிரத்து 900 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் 18 மாதங்களில் நிறைவடைந்தன – நிஷாரா ஜயரத்ன

சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான 12 ஆயிரத்து 900 இற்கும் மேற்பட்ட வழக்குகளின் விசாரணைகள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா வினால் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 18 மாதங்களில் 12 ஆயிரத்து 968 சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான வழக்குகளின் விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன என சட்டமா அதிபரின் இணைப்பதிகாரி, அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

முடிக்கப்பட்ட வழக்குகள் அனைத்தும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் என சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மேலும் 851 வழக்குகளின் விசாரணைகள் மாத்திரமே நிலுவையில் உள்ளன எனவும் சட்டமா அதிபரின் இணைப்பதிகாரி, அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கு, கிழக்கு காணிப் பிரச்சினை தொடர்பாக அரசு கவனம் செலுத்தும்

## என்கிறார் சமல் ராஜபக்ஷ



காணி விவகாரத்தில் பொதுமக்களின் பக்கமுள்ள நியாயத்திற்கே முதலிடம் வழங்கப்படும் என நீர்பாசன துறை அமைச்சு மற்றும் உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இரா ஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார். அத்தோடு, வடக்கு கிழக்கு காணி பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்துவோம் எனவும் அவர் கூறினார்.

நீர்பாசன துறை அமைச்சு மற்றும் உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சராகப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட பின்னர் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

‘அரச காணி அபகரிப்பும் கடந்த காலங்களில் இடம்பெற்று வந்துள்ளது. அவற்றை நிறுத்தும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரச காணிகளை தனியார் மயப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். அதேபோல் பொதுமக்களின் காணிகளை சூறையாடும் நிலைமையும் இருந்தது.

தெற்கில் அது தொடர்பாகப் பல முறைப்பாடுகள் எனக்குக் கிடைக்கப்பெற்றது. எனவே இப்போது நாம் புதிதாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டியுள்ளது. எனினும் இந்த விடயத்தில் மக்களின் பக்கம் உள்ள நியாயத்தை முதலில் கருத்திற்கொண்டு செயற்படவே அரசாங்கம் விரும்புகின்றது.

இதன்போது விவசாய பூமிகளை பாதுகாக்க வேண்டும், அதேபோல் நவீன தொழில்நுட்பத் திட்டங்களுடனும் நாம் பணியாற்றியாக வேண்டும். பிரச்சினைகளுக்கு அரசாங்கம் முற்றுப்புள்ளி வைக்கும். அனைத்து பிரச்சினைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும். காணி விடயத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவருமே பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் காரணிகள் என்ன என்பதை விடவும் மக்களின் காணிகள் குறித்த பிரச்சினைகள் இருப்பின் அவற்றைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்’ என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பஸ்ஸின் சில்லுக்குள் சிக்குண்ட நபர் பரிதாபகரமாக உயிரிழப்பு!



நுவரெலியா பிரதான பஸ் தரிப்பு நிலையத்தில் பஸ்ஸின் சில்லுக்குள் சிக்கி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இலங்கை போக்கு வரத்துச் சபையின் நுவரெலியா கிளைக்குச் சொந்தமான பஸ் ஒன்று உடபுஸல்லாவுக்குச் செல்வதற்காக பஸ் தரிப்பு நிலையத்துக்குள் வந்த வேளையில், நபர் ஒருவர் வீதியைக் கடக்க முற்பட்டுள்ளார். இதன்போது குறித்த நபர் எதிர்பாராத விதமாக, பஸ்ஸில் மோதுண்டு பஸ்ஸின் சில்லுக்குள் அகப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

45 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் நுவரெலியா ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

பஸ்ஸின் சாரதியை நுவரெலியாப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அத்துடன் பஸ்ஸையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியாப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# 134 பேர் தொடர்ந்தும் கொரோனா சிகிச்சையில்!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் 79 பேர் குணமடைந்து நேற்று (செவ்வாய்க்கிழமை) வைத்திய சாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 755 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்த நிலையில், தற்போது நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் சிகிச்சை நிலையங்களில் 134 கொரோனா தொற்றாளர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேநேரம் இலங்கையில் இது வரையில் 2 ஆயிரத்து 900 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் 2ஆயிரத்து 755பேர் குணமடைந்துள்ளதுடன், 134 பேர் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

அதேநேரம் ஏனைய 11 பேரும் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 3 அமைச்சுகளின் கடமைகளையும் பொறுப்பேற்றார் பிரதமர் மஹிந்த



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நேற்றுமுன்தினம் தனது மூன்று அமைச்சுகளின் கடமைகளையும் பொறுப்பேற்றார்.

மத வழிபாடுகளுடன் இடம்பெற்ற பிரதமரின் கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வில் அமைச்சர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சு, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு ஆகிய மூன்று அமைச்சுகளுக்குப் பொறுப்பாகவுள்ளார்.

குறித்த மூன்று அமைச்சுகளிலும் தனது கடமைகளை அவர் நேற்றுப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

# வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 305 இலங்கையர் நாடு மீண்டனர்!

கொழும்பு, ஓக. 19

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 305 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அதற்கமைய ஜோர்தான் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளிலிருந்து அவர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

டோஹாவிலிருந்து கட்டார் ஏயர்வேஸ் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் பணிபுரியும் 20 இலங்கையர்கள் நேற்று அதிகாலை 1.40 மணியளவில் நாடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, ஜோர்தானின், அம்மானிலிருந்து இலங்கை எயர்லைன்ஸ் நிறுவன விமானம் மூலமாக 285 இலங்கையர்கள் நேற்று அதிகாலை 4.35 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். விமான நிலையத்தை வந்தடைந்த அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து, பரிசோதனை முடிவுகள் வெளிவரும் வரையில் அவர்கள் அனைவரையும் விமான நிலையத்தை அண்மித்த பகுதியில் உள்ள ஹோட்டல்களில் தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கைதிக்கு ஹெரோயின் வழங்க முயற்சித்த பெண் ஒருவர் கைது

கேகாலை சிறைச்சாலையில் கைதி ஒருவருக்கு ஹெரோயின் வழங்குவதற்கு முயற்சித்த பெண் ஒருவர் விசேட அதிரடிபடையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போதே இந்தப் பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அந்தப் பெண்ணிடமிருந்து 6 கிராம் 350 மில்லிகிராம் ஹெரோயின் போதை பொருள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கைது செய்யப்பட்டுள்ள பெண்ணிடம் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து அவரின் வீட்டிலிருந்து 26 ஆயிரம் ரூபாய் பணம், மற்றும் 5 கையடக்க தொலை பேசிகள் மீட்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 30 ஆம் திகதி யாழ் நகரில் ஆர்ப்பாட்டம்

வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக் கப்பட்டவர்களின் உறவுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர் என அறிவித்துள்ளனர்.

உள்நாட்டுப்போரின்போதும், போரின் இறுதிக் காலப்பகுதியிலும் வடக்கு, கிழக்கில் ஏராளமான இளைஞர் யுவதிகள் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். அதேவேளை, இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்ததென்று இன்று வரை தெரியவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் பல வருடங்களைத்தாண்டியும் நடைபெற்று வருவதனால், சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக எதிர் வரும் 30 ஆம் திகதி யாழ்.மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது .

# சுரேன் ராகவனின் நியமனத்தினால் சு.கவுக்குள் குழப்பம்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தேசியப்பட்டியலுக்கு நியமித்தவரை புறக்கணித்துவிட்டு சுரேன் ராகவனுக்கு தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டமை குறித்து அமைச்சர் தயாசிறி ஜயசேகர கண்டனம் தெரிவித்துள்ளார்.

தேசிய பட்டியலுக்கான ஓர் ஆசனத்துக்கு நான்கு பெயர்களை சுதந்திரகட்சி பரிந்துரை செய்திருந்தது. அதில் பேராசிரியர் ரோகன லக்ஸ்மன் பியதாசவின் பெயர் முதலாவது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனினும் எங்களுடைய பரிந்துரையை புறக்கணித்து துரதிஷ்டவசமாக சு.கவின் சார்பில் சுரேன் ராகவனின் பெயரை பொதுஜனபெரமுன தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் இது குறித்து எங்களிடம் கேட்டிருக்கவேண்டும் அல்லது அறிவித்திருக்கவேண்டும், அவர்கள் அதனை செய்யவில்லை எனத் தெரிவித்துள்ள அமைச்சர் நாங்கள் இது குறித்து அதிருப்தியடைந்துள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

சுரேன் ராகவனின் நியமனம் என்பது இரு கட்சிகள் மத்தியில் ஏற்பட்ட உடன்பாட்டிற்கு முரணானது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கூட்டமைப்பு நாடாளுமன்றக்குழு வியாழன் கூடுகிறது கொழும்பில்!

## பதவிகளில் மாற்றங்கள் ஏற்படுமா?

யாழ்ப்பாணம், ஓக 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதவிநிலைகளில் மாற்றங்கள் ஏற்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு புதிய பேச்சாளர் ஒரு வர் நியமிக்கப்படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான தீர்மானம் ஒன்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) மத்தியசெயற்குழுநேற்று கூடிய வேளை நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பான செய்தி இன்றைய காலைக்கதிரில் பிரதான செய்தியாக வெளியாகியிருந்தது.

ரெலோவின் இந்தத் தீர்மானம் நாளை மறுதினம் நடைபெறவுள்ள கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு வலியுறுத்தப்படும் என்றும் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாக்குவீதம்சரிவு, தேசியப்பட்டியல் விவகாரம் என கூட்டமைப்புக்குள் பல வேறு சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில், பொதுத்தேர்தல் இடம்பெற்ற பின்னர் இடம்பெறவுள்ள முதலாவது நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் மின்தடை அபாயம்!

## நுரைச்சோலையும் செயலிழந்தது

கொழும்பு, ஓக 18

நுரைச்சோலை அனல் மின்நிலையம்செயலிழந்துள்ளமையால் நாட்டில் சுழற்சி முறையில் மின்வெட்டு நடைமுறைப்படுத்துவதற்கான நிலை தோன்றியுள்ளது.

நேற்று திங்கட்கிழமை நாடு முழுவதுவம் மின் தடை ஏற்பட்டதைத் தொடர்ந்து நுரைச் சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் செயலிழந்துவிட்டது என்று இலங்கைமின்சாரசபையின் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்த்தன தெரிவித்தார்.

நுரைச்சோலை அனல் மின் நிலையம் தேசிய மின் வழங்கலுக்கு அதிக அளவு மின்சாரத்தை வழங்குகிறது.

நாடு முழுவதும் 2 ஆயிரத்து 500 தொடக்கம் 2 ஆயிரத்து 600 மெகாவாட் மின்தேவையுள்ளநிலையில் நுரைச் சோலை அனல் மின் உற்பத்தி நிலையத் தால் 810 மெகாவாட் மின் விநியோகம் செய்யப்படுகிறது.

எனவே நாட்டில் மின் தேவையை சமநிலைப்படுத்துவதற்கு சில பிரதேசங்களுக்கு சுழற்சிமுறை மின் வெட்டை நடைமுறைப்படுத்தும் நிலை ஏற்படலாம் என்று இலங்கைமின்சாரசபையின் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

# எலும்புக்கூடு காணப்பட்ட பகுதியில் அகழ்வுப் பணி

## ஊடகவியலாளர்களுக்கு தடை



யாழ்ப்பாணம், ஓக 18

யாழ்ப்பாணம் - கொட்டடியில் மனித எலும்புக்கூடுகள் காணப்பட்ட பகுதிகளில் அகழ்வுப் பணிகள் இன்று செவ்வாய்க் கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

ஆனாலும் அந்த அகழ்வுப் பணிகள் தொடர்பாக படமெடுப் பதற்கோ அல்லது தகவல் சேகரிப்பதற்கோ ஊடகவியலாளர்களுக்குத் தடை விதிக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் - கொட்டடிப் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மனித எலும்புக்கூடு மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம், கொட்டடி மீனாட்சி அம்மன் ஆலய வீதிப்பகுதியில் தனியார் காணியொன்றில் கொட்டகை அமைப்பதற்காக நிலத்தைத் தோண்டிய போதே இவ்வாறு மண்டையோடு, எலும்புத் துண்டுகள் மற்றும் பெண்கள் அணியும் ஆடை ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியானது கடந்த 2006 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே இந்த விடயம் தொடர்பாக நீதிமன்றத்தில் பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்து, இன்று அகழ்வுப் பணிகள் மேற்கொள்வதற்கு அனுமதி பெற்றனர்.

அதனடிப்படையில் தற்போது சட்ட வைத்திய அதிகாரி மற்றும் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அகழ்வுப் பணி நடக்கும் இடத்துக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலமைச்சர் வேட்பாளர்களாகக் களமிறங்க

# மொட்டுவின் 5 பிரபலங்கள் இராஜினாமாச் செய்ய முடிவு?

ஸ்ரீலங்காபொதுஜன முன்னணியின் அமைச்சுப் பொறுப் புக்களை ஏற்காத பிரபல உறுப்பினர்கள் சிலர் நாடாளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமாச் செய்யவுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு மாகாண முதலமைச்சராகப் பதவி பெறுவதே அவர்களது எதிர்பார்ப்பதாக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படிபுதியநாடாளுமன்றத்துக்குத் தெரிவாகிய பிரபல அரசியல்வாதிகளான சுசில் பிரேமஜயந்த, அநுர பிரியதர்சன யாப்பா, ஜோன் செனவிரத்ன, சான் விஜேலால், சந்திம வீரக் கொடி ஆகியோர் இந்த முடிவை எடுத்துள்ளனர் எனக் கூறப் படுகின்றது.

மேலும் முன்னாள் எம்.பி. டிலான் பெரேராவும் ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# தொண்டமானின் வெவன்டன் இல்லம் இன்று அதிகாலை தீயில் எரிந்து நாசம்





கொழும்பு, ஓக 18

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரான முன்னாள் அமைச்சர் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் கொத்மலை வெவன்டன் இல்லத்தில் தீ பரவியுள்ளது.

இன்று அதிகாலை இந்தத் தீ பரவல் ஏற்பட்டுள்ளது. இதன்போது நுவரெலியா மற்றும் ஹட்டன் நகர சபை தீயணைப்பு பிரிவினரால் தீகட்டுப்பாட்டுக்குள்கொண்டுவரப்பட்டுள்ளது.

தீயால் அங்கிருந்த சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தின்போது காவலாளி மட்டுமே அங்கிருந்துள்ளார் என்று கூறப்படுகின்றது. தீ எப்படிப் பரவியது என்பது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

# சிறைச்சாலைகளில் எஸ்.ரி.எவ். பாதுகாப்பு

கொழும்பு,ஓக.18

சிறைச்சாலைகளின் பாதுகாப்புக்காகப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரை (எஸ்.ரி.எவ்.) பயன்படுத்தும் நடவடிக்கை, எதிர்வரும் வாரம் முதல் நடைமுறைப் படுத்தப்படும் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, பாதுகாப்பு அமைச்சால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, பொலிஸ் விசேட அதிரடிப் படையினரைப் பயன்படுத்துவதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

சிறைச்சாலை மதில்களின் மேலால் சட்டவிரோதமாக பொருள்கள் சிறைச் சாலைகளினுள் வீசப்பட்ட சம்பவங்கள் அண்மைக் காலத்தில் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பான சம்பவங்களில் பலர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் சிறைச்சாலைகளுக்கு வெளியே பாதுகாப்பு வழங்கு வதை நோக்கமாகக் கொண்டு பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நிறுத்தப்படவுள்ளனர்.

சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பது உட்பட சிறைச்சாலைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதே இதன் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள பிள்ளையானுக்குக் கிடைத்தது அனுமதி

மட்டக்களப்பு, ஓக 18

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து இம்முறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட் டுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன், நாளைமறுதினம் நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்கு, மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் இன்று அனுமதி வழங்கியுள்ளது.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான சிவநேசத்துரை சந்திரகாந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை வழக்கில் 3ஆவது சந்தேகநபராக மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் இருந்து வருகின்றார்.

இந்நிலையில், அவர் நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்கு அனுமதி கோரி பிள்ளையானின் சட்டத்தரணிகளால் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நகர்வு மனுவொன்று தாக்கல் செய்யப் பட்டது.

இதனை இன்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டு ஆராய்ந்த மட்டக்களப்பு மேல் நீதிமன்ற மேலதிக நீதிபதி டி. எஸ். சூசைதாசன், சிவநேசத்துரை சந்திரகாந் தனை நாளைமறுதினம் நாடாளுமன்ற அமர்வில் பூரணமாகக் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கினார்.

இதனடிப்படையில் பிள்ளையானை, மட்டக்களப்பு சிறைச்சாலை அதிகாரிகள் நாடாளுமன்ற அமர்வுக்காக அழைத்துச் செல்லவுள்ளனர்.

பிள்ளையானின் சார்பில் சட்டத்தரணிகளான யு.ஏ.நஜீம், ஏ.உவைஸ், திருமதி மங்கேஸ்வரி சங்கர் ஆகியோர் நீதிமன்றத்தில் இன்று ஆஜராகினர்.

# குடாநாடு இருட்டில் இருந்தபோதுதான்



- ந.லோகதயாளன் -

> குடாநாட்டில் 3 மின் உற்பத்தி நிலையங்களிலும் எந்தத் தடையும் இன்றி பணி இடம்பெற்றபோதும் குடாநாடு ஏன் 9 மணி நேரம் இருளில் இருந்தது என ஆராய்ந்தபோதே பல உண்மைகள் வெளியே வந்தன.

# வெளிச்சத்துக்கு வந்தது மோசடி!

'உப்பு இல்லாத போதுதான் உப்பின் அருமையும் அப்பு இல்லாதபோதுதான் அப்புவின் அருமையும் தெரியும்' என்பது பழைய பழமொழி .

ஆனால், 9 மணிநேரம் யாழ். குடாநாட்டில் மின்சாரம் இல்லாது இருட்டில் இருந்தபோதுதான் மின்சாரத்தில் இடம்பெறும் மோசடி வெளிச்சத்துக்கு வந்தது.

கெரவலப்பிட்டியா மின் உற்பத்தி நிலையத்தில் நேற்றுமுன்தினம் மதியம் 12.50 மணியளவில் ஏற்பட்ட பாதிப்பால் நாடு பூராகவும் மின்சாரம் தடைப்பட்டது. இருப்பினும் சில மணி நேரங்களில் இருந்து பகுதி பகுதியாக மின்சார விநியோகம் நாட்டில் பரவலாக இடம்பெற்றபோதும் யாழ். குடாநாட்டில் இரவு 9.45ஐ தாண்டியே மின் விநியோகம் ஆரம்பமாகியது.

இலங்கையின் மிகப் பெரும் மின் உற்பத்தி நிலையங்களான விக்டோரியா, கொத்மலை, புத்தளம் மின் உற்பத்தி நிலையங்கள் உட்பட நாட்டில் 25 இற்கும் மேற்பட்ட மின் உற்பத்தி நிலையங்கள் உண்டு . அவை நீர் மின் உற்பத்தி, அனல் மின் உற்பத்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்தி எனப் பலவும் இருந்தாலும் இந்தக் கெரவலப்பிட்டியா மின் உற்பத்தி நிலையமே மிகப்பெரிய எரிவாயு மின் உற்பத்தி நிலையமாகவும் காணப்படுவதனால் இங்கே ஒரு தடை ஏற்படும்போது அதிக பிரதேசங்கள் இருளில் மூழ்குகின்றன என்று இலங்கை மின்சார சபை தெரிவிக்கின்றது.

வடக்கு மாகாணத்தில் தற்போது 3 மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளன. அத்தோடு நான்காவது மின் உற்பத்தி நிலையத்துக்கான பணியும் மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டது. ஐந்தாவது உற்பத்தி நிலையம் விரைவில் பூநகரியில் அமைக்கப்படவுள்ளது. தற்போது இயங்கும் 5 மின் உற்பத்தி நிலையங்களும் சிறிய அளவானாலும் சுன்னாகம் உதுறு ஜனனி மின் உற்பத்தி நிலையம் , பளை மற்றும் நாவற்குழு காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் என்பன இயங்கிக்கொண்டுதான் உள்ளன. இவ்வாறு யாழில் இயங்கும் 3 மின் உற்பத்தி நிலையங்களிலும் 50 மெகாவாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையில் குடாநாட்டுக்குப் பகல் வேளையில் 40 மெகாவாட்ஸும் இரவில் 50 மெகாவாட்ஸ் மின்சாரமும் மட்டுமே தற்போது வரையில் பயன்படுத்தப்படுகின்றது. இதன் பிரகாரம் குடாநாட்டு மின்சாரப் பாவனைக்கு தன்நிறைவான உற்பத்தி குடாநாட்டிலேயே கிடைக்கின்றது.

அத்தோடு வடக்கு மாகாணத்தின் பெரும் பகுதி தேவையையும் இங்கேயே நிறைவு செய்யும் அதே நேரம் வடக்கு மாகாணத்தில் தற்போது வவுனியாவில் இரு சூரிய மின்கல மின் உற்பத்தி நிலையங்கள் இயங்குகின்றமையோடு விரைவில் மேலும் இரு உற்பத்தி நிலையங்களும் இயங்கவுள்ளன. இவை இயங்கினால் வடக்கு மாகாணம் தனக்கான மின் உற்பத்தியில் தன்னிறைவை முழுமையாக எட்டிவிடும்.

நிலைமைகள் இவ்வாறிருக்க விநியோகத்தில் அன்றி, ஓர் உற்பத்தி மையத்தில் ஏற்பட்ட தடையால் நாடு பூராகவும் தடைநீடித்தது. அதிலும் குறிப்பாக குடாநாட்டில் 3 மின் உற்பத்தி நிலையங்களிலும் எந்தத் தடையும் இன்றி பணி இடம்பெற்றபோதும் குடாநாடு ஏன் 9 மணி நேரம் இருளில் இருந்தது என ஆராய்ந்தபோதே பல உண்மைகள் வெளியே வந்தன.

அதாவது சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தால் ஆரம்பத்தில் அதன் அயல் கிராமங்களே சுற்றுச் சூழல் பாதிப்படைந்தமை உலகறிந்த விடயம். இருந்தபோதும் அங்கே தற்போதும் 24 மெகாவாட்ஸ் மின் உற்பத்தி இடம்பெறுகின்றது. அதிலும் குறிப்பாக குறிப்பிட்ட மின்சாரம் தடைப்பட்ட தினமும் அந்த 9 மணிநேரமும் மின் பிறப்பாக்கிகள் இயங்கின. ஆனால் அதன் ஒலியைக் கேட்கும் தூரத்துக்குக்கூட மின் விநியோகம் இல்லை என்பது அப்பகுதி மக்களின் வேதனையாக இருந்தது. அப்படியானால் இந்த மின்சாரம் எங்குதான் போகின்றது என ஆராய்ந்தோம்.

இலங்கையில் இடம்பெறும் அனைத்து மின் உற்பத்தியும் ஒருங்கிணைக்கப்பட்டு அவை தேசியமயப்படுத்தலின் கீழ் முழுக் கட்டுப்பாடும் கொழும்பில் மட்டுமே உள்ளது. பெரிய உற்பத்தி மையங்கள் தடைப்பட்டதும் இந்தச் சிறிய உற்பத்தி மையங்களால் கிடைக்கும் உற்பத்தியும் நாட்டின் ஏதோ ஒரு பகுதிக்கு திருப்பப்படும். ஆனால், உற்பத்தி செய்யும் பகுதிக்கு கிடைக்கவில்லை.

யாழ். குடாநாட்டின் எல்லையிலோ அல்லது வடக்கின் எல்லையிலோ ஓர் கட்டுப்பாட்டு அலகு ஏற்படுத்தப்படுமானால் தேசிய விநியோகத்தில் ஒரு தடை ஏற்படுமானாலும் சுமார் 15 நிமிட இடைவேளையில் எமது பகுதி உற்பத்தியை இப்பகுதிக்கே வழங்க முடியும். இதற்கு அதற்கான அதிகாரத்தை மத்தி மாகாண மின் அத்தியட்சகருக்கு வழங்க வேண்டிய தேவையுள்ளது. ஆனால், இலங்கை மின்சார சபை அதனை வழங்காது. ஏனெனில் ஒரு தடை அல்லது தாமதம் ஏற்பட்டால் முக்கிய பகுதிகளுக்கும் முக்கிய நபர்கள் உள்ள பகுதிக்கும் இவ்வாறான மின்சாரம் திருப்பப்படுகின்றது.

இது தொடர்பில் வடக்கு மாகாண மின் அத்தியட்சகர் பிரபாகரனைத் தொடர்புகொண்டு கேட்டபோது, குறித்த விடயம் தேசிய ரீதியிலான அரச கொள்கைகளுடன் தொடர்பான விவகாரமாக உள்ளது. அதேநேரம் தனித் தனியான கட்டுப்பாடு இருப்பின் தடங்கலை ஒருவேளை சீர் செய்ய முடியும். அசம்பாவிதம் ஏதும் ஏற்பட்டால் அதன் விளைவும் பாரதூரமானதாகவே இருக்கும் . இருப்பினும் இது தொடர்பில் அமைச்சு மட்டத்திலேயே தீர்வை எட்ட முடியும் என்றார்.

இதேநேரம் நாடு முழுவதும் 2 ஆயிரத்து 500 தொடக்கம் 2 ஆயிரத்து 600 வரையான மெகா வாட்ஸ் மின்சாரம் தேவையான இடத்தில் 600 மெகா வாட்ஸ் மின்சாரத்தை நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையமே மேற்கொள்கிறது. இந்நிலையில் அங்கு ஒரு மின் உற்பத்தி நிலையம் தடைப்பட்டால் அத்தனை நிலையத்தின் விநியோகப்பகுதியும் தடைப்படும் வண்ணமாகவா எமது நாட்டின் மின்சார விநியோக முறை உள்ளது என்ற கேள்வி தொடர்பிலும் இலங்கை மின்சார சபையே பதிலளிக்க வேண்டிய கடப்பாட்டில் உள்ளது.

# யாழில் திருட்டு, கொள்ளைகளோடு தொடர்புபட்ட மூன்று பேர் சிக்கினர்



யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம், சாவகச்சேரி, சுன்னாகம் பகுதிகளில் அண்மைய நாள்களில் இரவு வேளைகளில் வீட்டில் தனிமையில் இருந்த வயோதிபர்களைத் தாக்கிக் கொள்ளையில் ஈடுபட்ட மூவர் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 7 பவுண் திருடப்பட் நகைகள் மற்றும் திருடப்பட்ட 20 பவுண் நகைகளுக்கான அடகுச் சீட்டுக்கள் மற்றும் அடையாள அட்டை, கடவுச்சீட்டுக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மூவரில் இருவர் கணவன் - மனைவி. மற்றவர் அவர்களோடு திருட்டில் ஈடுபட்டவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மைய நாள்களில் வீடுகளில் தனித்திருக்கும் முதியவர்களை இலக்கு வைத்து இந்தக் குழுவானது இரவு வேளைகளில் வீட்டின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கி வயோதிபர்களை கடுமையாகத் தாக்கி நகை, பண கொள்ளையில் ஈடுபட்டு வந்தது.

யாழ் மாவட்டத்தின் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதையடுத்து யாழ் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரான்சிஸ் தலைமையிலான குழுவினரால் இந்த முறைப்பாடுகள் தொடர்பாகப்புலன் விசாரணை முன்னெடுக்கப்பட்டது. திருட்டுச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்ட மூவர் கைது செய்யப்பட்டனர்.

# 79 பேர் குணமடைந்தனர்

*நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த மேலும் 79 பேர், பூரணமாக குணமடைந்து நேற்றுத் தமது வீடுகளுக்கு சென்றுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

*இதனையடுத்து, இலங்கையில் இது வரையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2,755 ஆக அதிகரித்துள்ளது.*

*இவர்களில், 134 தொற்றாளர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.*

*அத்துடன், இலங்கையில் இதுவரை 2900 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.*



# இது சர்வாதிகார ஆட்சியா? அது அப்பட்டமான பொய்!

## அடித்துக் கூறுகிறார் பிரதமர் மஹிந்தர்

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் அதிக அளவிலான விருப்பு வாக்குகளை பெற்று சரித்திரம் படைத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சிங்கள வார இதழொன்று அண்மையில் பேட்டிகண்டது. அப்பேட்டியில் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவற்றுக்கு அவர் வழங்கிய பதில்களும் வருமாறு:-

**கேள்வி:- அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு கிடைத்த அமோக வெற்றியைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்:-** பொதுத் தேர்தலுக்கான பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டபோதே வெற்றி கிடைக்கும் என்பது நாம் எதிர்பார்த்திருந்த ஒன்றுதான். ஈஸ்டர் ஞாயிறு தின தாக்குதல் காரணமாக மக்கள் நிர்க்கதியான நிலையில் இருந்தனர். முன்னய அரசாங்கம் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தவறிவிட்டது. அதேபோல் 30 வருடகால பயங்கரவாத யுத்தத்தின் போதும் நாங்கள் தான் நாட்டை மீட்டெடுத்தோம். எமது தாய் நாட்டை மீட்டெடுத்ததற்குக் கூட எதிர்ப்பு தெரிவித்த எதிர்க் கட்சியினர் இருந்த நாட்டிலேயே அதனை நாம் செய்தோம். நல்லாட்சி அரசாங்கத்தால் எந்தவொரு அபிவிருத்தியும் செய்யப்படவில்லை.

ஜனதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்டிருந்த இழுபறி காரணமாக நாட்டின் எதிர்காலம் சிக்கலில் இருந்தது.

நாட்டில் இரண்டு வரை அரசியல் குழுக்கள் இருந்ததாக நான் நம்புகிறேன். அதில் ஒன்று நாட்டை நேசித்தது. மற்றையது நாட்டை அழித்தது. இந்த இரு குழுக்களுக்கு இடையில் தான் தேர்தல் நடந்தது. இதில் முன்னால் சொல்லப்பட்ட நாட்டை நேசிக்கும் குழுவினரையே மக்கள் தெரிசெய்துள்ளனர்.

**கேள்வி:- மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவதை விடுத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு தேர்தலில் வெற்றிபெற 113 ஆசனங்களைக் கூட பெற்றுக்கொள்ள முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்து கூறி வந்தது. இந்த நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுள்ளது. இந்த வெற்றியின் இரகசியம் என்ன?**



**பதில்:-** இதில் எந்த இரகசியமும் இல்லை. நாங்கள் எப்போது மக்கள் மீதான அக்கறையை மனதில் வைத்தே தீர்மானங்களை எடுத்தோம். நல்லாட்சி அரசாங்கத்தை தெரிவு செய்த தவறுக்காக மக்கள் இன்னும் கவலைப்படுகின்றனர். நாம் அந்த தவறை செய்யவில்லை. கடந்த ஐந்து வருடங்களில் நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியில் நாடு பின்னோக்கிச் சென்றது. கொரோனா வைரஸை ஓர் உதாரணமாகக் கொள்வோம். இந்த நேரத்தில் நாம் அதிகாரத்தில் இல்லாதிருந்தால் பலர் இந்நேரம் புதை குழிக்குள் இருப்பார்கள். ஜனாதிபதி கோட்டாபய முப்படையினர், பொலிஸ்மற்றும்சுகாதாரதுரையினரைகூட்டிணைத்து நாட்டைக் காப்பாற்றினார். கொரோனா சமயத்தில் நாம் மக்களுக்கு நிதியுதவி வழங்கியமையுடன் எந்தக் குறைப்பாடும் இல்லாது உணவுப் பொருள்களையும் விநியோகித்தோம்.

**கேள்வி:- எதற்காக நீங்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கேட்டீர்கள்? அது தேவையானதா?**

**பதில்:-** ஆம். கண்டிப்பாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை எமக்கு தேவைப்படுகிறது. அரசமைப்புத் திருத்தம் மூலம் நல்லாட்சி அரசாங்கம் நாட்டில் ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்தியது. 19 ஆம் திருத்த சட்டம் ஒரு முட்டுக்கட்டை. இதை நாம் கடந்த ஐந்து வருடங்களில் அனுபவித்திருக்கிறோம். நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்கு அது ஒரு தடையாகும். நல்லாட்சி அரசாங்கம் ஒரே ஒரு குடும்பத்தை மையப்படுத்தி அரசமைப்பை வகுத்தது. இதுபோன்று நாட்டின் அரசியல் சரித்திரத்தில் ஒருபோதும் நடந்ததில்லை.

நாங்கள் எப்போதுமே நாட்டையும் மக்களையும் பற்றி சிந்தித்தே தீர்மானங்களை எடுத்தோம். அதனைத் தொடர்வதற்கு எமக்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கம் ஆகிய தரப்புகள் நெருங்கிப் பணிபுரிவதை உறுதிப்படுத்தும் அரசமைப்பொன்று தேவை. அவ்வாறான ஒரு முறைமைக்கு நடைமுறை சாத்தியம் வழங்கவே புதிய அரசமைப்பு தேவைப்படுகிறது.

**கேள்வி:- எதிர்க் கட்சியினரும் அதனுடன் தொடர்புடையவர்களும் நீங்கள் சர்வாதிகார பாதையில் செல்கின்றீர்கள் என்று குற்றம்சாட்டுகின்றனரே. அதில் ஏதும் உண்மை இருக்கிறதா?**

**பதில்:-** அது ஒரு அப்பட்டமான பொய். நாங்கள் நாட்டை ஆட்சி செய்தபோது மக்கள் சுதந்திரமாக இருந்தார்களா, இல்லையா என்று அவர்களையே கேளுங்கள். அவர்களின் பதில் என்னவாக இருக்கும் என்று எனக்குத் தெரியும். சர்வாதிகாரம் பற்றி பேசுவோருக்கு உண்மையிலேயே அது என்னவென்று தெரியாது. நாம் எப்போதும் சர்வாதிகாரத்தை பின்பற்றியதில்லை. கடந்த ஆட்சியில் சர்வாதிகாரம் இருந்தது. எம்மீது குற்றச் சாட்டுகளை சுமத்தாமலே எம்மை கைது செய்தார்கள். வேண்டுமென்றே சுமத்திய குற்றச்சாட்டுகளை வைத்துக்கொண்டு யுத்த ஹீரோக்களையும் உள்ளே தள்ளினார்கள்.

அவர்களது அக்கதைக்கேற்ப சட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு மக்கள் அபிப்பிராயத்துக்கு மாறாக தீய செயல்களில் ஈடுபட்டனர். அதேநேரம் நாம் பொதுமக்களின் கருத்துகளுக்கும் பிரச்சினைகளுக்கு ஏற்றவாறு செயற்பட்டோம்.

**கேள்வி:- இம்முறை அமைச்சரவை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உள்ளது. எதிர்காலத்தில் இது பிரச்சினைகளை ஏற்படுத்தாதோ?**

**பதில்:-** இல்லை. ஒருபோதும் இல்லை. அமைச்சரவை சிறிய அளவில் இருந்தாலும் அது முறையாக அமைந்துள்ளது. உலகப் பொருளாதாரமே இப்போது பல காரணங்களால் சீர்குலைந்துள்ளது. சமூக மற்றும் கலாசார சீரழிவும் உள்ளது. அரசியல் தலைவர்களுக்கும் நாட்டின் தலைமைகளுக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் சுமை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மத அரசியல் பேதமின்றி நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப வருமாறு நாம் அழைப்பு விடுக்கிறேன்.

**கேள்வி:- ஸ்ரீலங்கா பொதுபெரமுனவின் தேசிய பட்டியல் உறுப்பினர்கள் தொடர்பாக திருப்தியடைகிறீர்களா?**

**பதில்:-** நிச்சயமாக. வேறு ஒரு தடவையிலும் இல்லாதவாறு இம்முறை எமது தேசிய பட்டியலில் படித்த, அறிவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ய முடிந்துள்ளது. அதில் கலாநிதிகள், ஆசிரியர்மார், சட்டத்தரணிகள், சமூக சேவகர்கள் மற்றும் டாக்டர்கள் என சகல தரப்பினரும் இடம்பெற்றுள்ளனர். அவர்களது அறிவைக் கொண்டு நாட்டின் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

**கேள்வி: லட்சக்கணக்கான பட்டதாரிகளுக்கும் க.பொ. த சாதாரண தரத்தில் சித்தியடைந்தோருக்கும் தொழில் வாய்ப்புகளை வழங்கப் போவதாக அரசியல் மேடைகளில் கூறினீர்களே. இது சாத்தியமாகுமா?**

**பதில்:** ஆம். மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நாம் முழு மூச்சுடன் செயற்படுவோம். நிதி நிலைமை சீராக இல்லாத நிலையிலும் நாம் எந்த வாக்குறுதிகளையும் வழங்கினால் அதனை நிச்சயமாக நிறைவேற்றுவோம். புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடனேயே பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கினோம். ஆனால் தேர்தல் காரணமாக அந்த நியமனங்கள் தற்காலிகமாக பின்போடப்பட்டுள்ளன.

**கேள்வி:- குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட நீங்கள் இலங்கை தேர்தல் சரித்திரத்தில் உள்ளாதவாறு அதிகளவிலான விருப்பு வாக்குகளை பெற்றுள்ளதையிட்டு என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்:-** என்மீது நம்பிக்கை வைத்துள்ள குருநாகல் மாவட்ட வாக்காளர்களுக்கு நான் முழு மனதுடன் நன்றி தெரிவிக்கிறேன். இந்தமுறை தேர்தல் பெறுபேறுகள் நான் மட்டுமன்றி எமது மொத்த அணியும் மக்களுடனேயே இருக்கிறோம் என்பதை காட்டியுள்ளது.

**கேள்வி:- உங்களது அமோக வெற்றியின் பின்னால் உள்ள சக்தி எது?**

**பதில்:-** நாம் நாட்டுக்கு ஆற்றியுள்ள சேவைகளுக்கு மக்கள் எம்மீது நம்பிக்கை வைத்துள்ளனர். பஸில் ராஜபக்சவும் பலம் மிக்க ஒரு அணியும் இந்த பாரிய செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தனர். தேர்தலுக்கு நாம் நேரகாலத்துடன் தயாராகினோம்.

இம்முறை நாம் பதாதைகள் மற்றும் கட்அவுட் கலாசாரத்துக்கு முடிவு கட்டிவிட்டோம். இதனால் பல்வேறு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையே மோதல்கள் தவிர்க்கப்பட்டன. இதனால் தேர்தல் அமைதியாக நடந்தது. இதற்கான அனைத்து பெருமையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கே செல்லவேண்டும்.

**பக்தி தர்மபிரிய மெண்டிஸ்**
**தமிழில்:- என். ராமலிங்கம்**

அரசமைப்புத் திருத்தம் மூலம் நல்லாட்சி அரசாங்கம் நாட்டில் ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்தியது. 19 ஆம் திருத்த சட்டம் ஒரு முட்டுக்கட்டை. இதை நாம் கடந்த ஐந்து வருடங்களில் அனுபவித் திருக்கிறோம். நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்கு அது ஒரு தடையாகும். நல்லாட்சி அரசாங்கம் ஒரே ஒரு குடும்பத்தை மையப்படுத்தி அரசமைப்பை வகுத்தது. இதுபோன்று நாட்டின் அரசியல் சரித்திரத்தில் ஒருபோதும் நடந்ததில்லை.

# சாமிமலைத் தோட்டத் தொழிலாளரின் போராட்டத்துக்கு இணக்கமான தீர்வு



ஆர்ப்பிக்கோ கம்பனியின் கீழ் இயங்கும் மஸ்கெலிய சாமிமலை டீசைட் தோட்டத்தில் தொழில்புரியும் தொழிலாளர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து அவற்றுக்கு தீர்வு வேண்டும் என வலியுறுத்தி நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், அந்தத் தொழிற்சங்க போராட்டத்துக்கு வெற்றி கிடைத்துள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் ஐக்கிய முன்னணி ஆகியன தொழிலாளர்களின் சார்பில் தோட்ட நிர்வாகங்களுடன் நடத்திய பேச்சின் பயனாகவே தீர்வை வழங்குவதற்கு கம்பனிகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

இதன்படி –

1.தோட்ட நிர்வாகத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 60 தொழிலாளர்களின் இரண்டு நாட்கள் சம்பளம் உடன் கையளிக்கப்படவேண்டும்.

2. மாதாந்தம் 24 நாள்கள் வேலை வழங்கப்படவேண்டும்.

3 .தேயிலை தொழிற்சாலை நேற்று முதல் திறக்கப்பட வேண்டும்

– போன்ற விடயங்களை செய்து தருவதாக உறுதி வழங்கியுள்ளதுடன் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக எதிர்வரும் 24 ஆம் திகதி தோட்ட கம்பனி முக்கியஸ்தர்களுடன் நேரடியாக கலகலந்துறையாடலின் பின் தீர்வு ஒன்றை பெற்று தருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல்





இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராக நாமல் ராஜபக்ஷ தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இந்த நிகழ்வு, நேற்று காலை விளையாட்டுத்துறை அமைச்சில் இடம் பெற்றது.

மஹா சங்கத்தினர், சர்வ மதத் தலைவர்கள், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அவரது குடும்ப உறுப்பினர்கள், அமைச்சர்கள், விளையாட்டுச் சங்கங்களின் பிரதிநிதிகள், விளையாட்டுத்துறை ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# அநுராதபுரம் விபத்தில் பெண்ணொருவர் பலி!

அநுராதபுரம், ஓக. 19

மாஹவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாதெனிய –அநுராதபுரம் வீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் நோக்கி சென்ற ஜீப் பொன்று வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது. ஜீப்பின் சாரதி தூக்கக் கலக்கத்தில் வாகனம் செலுத்தியமையே விபத்துக்கான காரணமென பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த ஜீப்பின் சாரதி மற்றும் முன்னாலிருந்து பயணித்த பெண் இருவரும் மாஹவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும், சிகிச்சை பலனின்றி பெண் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

அநுராதபுரம் – பட்டுமக பகுதியைச் சேர்ந்த 55 வயதான பெண்ணொருவரே விபத்தில் உயிரிழந்துள் ளார். மஹவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்

# மன்னார் நகர சபைக்கு புதிய ரெலோ உறுப்பினர்

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் நகர சபையில் ரெலோ (தமிழீழ விடுதலை இயக்கம்) சார்பாக எழுத்தூர் வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்று பின்னர் கட்சியில் இருந்து விலகி நாடாளுமன்ற தேர்தலில் சுயேச்சைக் குழுவில் போட்டியிட்ட மனோ ஐங்கர சர்மாவிற்கு பதிலாக புதிய ஒருவரை நகர சபை உறுப்பினராக நியமிக்க ரெலோ கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மன்னார் நகர சபை தேர்தலில் ரெலோ சார்பாக எழுத்தூர் வட்டாரத்தில் மனோ ஐங்கர சர்மா போட்டியிட்டு வெற்றி பெற்று மன்னார் நகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிலையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்ட இந்த நகர சபை உறுப்பினர். அதற்காகத் தாம் கட்சியில் இருந்து விலகுகிறார் என எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.

அதனைப் பரிசீலினை செய்த ரெலோ அவர் வகித்த மன்னார் நகர சபை உறுப்பினர் பதவிக்கு கட்சியின் வேறு உறுப்பினர் ஒருவரை நியமிக்க நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. அந்த இடத்திற்கு மன்னார் நகர சபைத் தேர்தலில் போட்டியிட்ட சமாதான நீதவான் என்.கணேசலிங்கத்தை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரெலோ அறிவித்துள்ளது.

# ஆயித்தியமலை புனித சதாசகாயமாதா திருத்தல திருவிழாவுக்கு நூறு பேருக்கு மாத்திரம் அனுமதி







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் புராதானமானதும் பழமையானதுமான ஆயித்தியமலை புனித திருத்தலமான சதாசகாயமாதா திருத்தல திருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதியன்று ஆரம்பமாகவுள்ளதை முன்னிட்டு அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் கலந்துரையாடல் நேற்று முன்தினம் மட்டக்களப்பு சால்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

இத்திருவிழாவில் பக்தர்கள் அதிகளவாக கூடுவது தொடர்பாக இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. தற்போதைய கொரோனா நோய்தாக்கத்தில் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டை சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவுறுத்தியுள்ளனர். பொதுவாக சுகாதாரத் திணைக்களத்தின் சுற்று நிருபத்தின் அடிப்படை விடயங்களைப் பின்பற்றுமாறு வலியுறுத்தப்பட்டது.

அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைப் பொதுவாக மக்கள் ஒன்று கூடுகின்ற இடங்களில் கடைப்பிடிப்பது என்றும், ஒரே நேரத்தில் நூறு பக்தர்களை மாத்திரம் ஆலயத்திற்குள் அனுமதிப்பது என்றும், அதேவேளை ஆலயத்தில் விசேடமாக மூன்று திருப்பலிகள் நடத்துவதற்கு குருமுதல்வர்கள் தீர்மானித்துள்ளனர் என்றும், அன்னதானம் மற்றும் தண்ணீர்ப் பந்தல்கள், கடைகள், உணவகங்களுக்கான அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் கூறப்பட்டது.

மட்டக்களப்பு மாதா திருத்தலத்தில் இருந்து பாதயாத்திரீகர்கள் செல்வது வழமை. இம்முறை பாதயாத்திரை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. கண்டிப்பாக முகக்கவசம் அணிதல், கைகளைக் கழுவுதல், சமூக இடைவெளிகளைப் பேணுதல் போன்ற விடயங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும், யாத்திரீகர்கள் தங்களுக்கான உணவுப்பொருள்களைக் கொண்டுவருதல் வேண்டும் எனவும் அறிவுறுத்த அரசாங்க அதிபரால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாத்திரீகர்களுக்காகப் பொது போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் பாதுகாப்புக்காக பொலிஸாரும், இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. தண்ணீரை வழங்கும் போது போத்தல் தண்ணீரை வழங்கவும் முடிவுசெய்யப்பட்டது.

இக்கூட்டத்தை கிறிஸ்தவ சமய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ரேகா நிருபன் ஒருங்கிணைத்தார். அதில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய கலாநிதி பொன்னையா யோசப் ஆண்டகை மற்றும் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், பிரதேச சபையின் தவிசாளர், பிராந்திய சுகாதார பணிப்பாளர்கள், வைத்திய அதிகாரிகள், சுகாதார பரிசோதகர்கள், கிராமசேவையாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# 13யையும், 19யையும் மோசமாக மாற்றினால் விளைவுகள் விபரீதமாகும் என எச்சரிக்கை!

## மனோ கணேசன் விடுக்கிறார்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், ஓக.19

தற்போதைய அரசாங்கம் மூன்றில் இரண்டு என்ற அசுரபலத்தினைப் பயன்படுத்தி 13ஆம், 19ஆம் அரசியல் யாப்புத் திருத்தங்களை மோசமாக மேற்கொள்ளுமாக இருந்தால் அதன் எதிர்விளைவுகளை சந்திக்க வேண்டிவரும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

13ஆம், 19ஆம் அரசியல் யாப்புத் திருத்தங்களில் அரசாங்கம் கைவைக்கக் கூடாது. அந்தத் திருத்தங்கள் மீது கை வைப்பதாக இருந்தால் அவற்றை இப்போது உள்ளதை விட இன்னமும் சிறப்புற மாற்றுவற்காக இருக்க வேண்டுமே யொழிய அதனை அழிப்பதாக இருக்கக் கூடாது.

வெறுமனே நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்துக் கொண்டு தாம் நினைக்கின்ற அனைத்தையும் செய்துவிட முடியும் எனத் தற்போதைய அரசாங்கம் நினைக்கின்றது. அதுபோலவே கடந்த காலங்களில் இருந்த அரசாங்கங்கள் தமக்கு இருக்ககூடிய பெரும்பான்மையை வைத்துக் கொண்டு சிலவற்றை மேற்கொண்டனர்.

1956ஆம் ஆண்டு இருந்த அரசாங்கம் தன்னிடம் இருந்த பெரும்பான்மையை பயன்படுத்தி தனிச் சிங்களச் சட்டத்தினை கொண்டுவந்தது. அதன் பிற்பாடு நாடு பாரிய யுத்தத்தினை சந்தித்தது. லட்சக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். பல லட்சம் மக்கள் நாட்டை விட்டு வெளியேறினர். நாட்டினுடைய பொருளாதாரம் அதல பாதாளத்தினுள் சென்று இன்னமும் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைய முடியாமல் நாடு தவிக்கின்றது.

நாடாளுமன்றத்தில் தலைகளின் எண்ணிக்கையில் பெரும்பான்மை பலத்தை வைத்துக்கொண்டு எதனையும் செய்யலாம் என நினைத்தால் அது முட்டாள்தனம். ராஜபக்ஷக்கள் கடந்த கால வரலாற்றுப் படிப்பினையை மனதில் கொண்டு செயற்படுவார்கள் என நம்புகிறேன்.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினுடைய பெயர் பலகையில் உள்ள தமிழ் மொழியில் இருந்த எழுத்துப்பிழை திருத்தப்பட்டதை பலர் பெரிதாக பேசுகின்றனர். இது ஒரு சிறிய விடயம். இதனைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு சமூக ஊடகங்களில் பாராட்டு தெரிவிக்கின்றனர். அந்தளவிற்கு தமிழ் இனம் தரமிறங்கிப் போய்விட்டது.



அரச பெயர்ப் பலகைகளில் மும்மொழிகளுக்கும் முக்கியத்துவமளித்து அவற்றில் எழுத்துப்பிழைகள் ஏதேனும் இருந்தால் அதனை திருத்த வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடாகும். அதனை பெரிதுபடுத்தத் தேவையில்லை. - என்றார்.

# புதிய அரசமைப்பு உருவாக்கும் பணி உடனடியாகவே ஆரம்பமாக உள்ளது

## நீதியமைச்சின் புதிய செயலாளர் தகவல்

கொழும்பு, ஓக.19

நடைமுறையிலுள்ள அரசமைப்புக்குப் பதிலாக புதிய அரசமைப்பை கொண்டு வருவதற்கான பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாக நீதியமைச்சின் செயலாளர் சட்டத்தரணி பிரியந்த மாயாதுன்னே தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட சட்டத்தரணி பிரியந்த மாயாதுன்னே நேற்றைய தினம் நீதியமைச்சில் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர்-

புதிய அரசமைப்பினை உருவாக்குவதற்கான ஆணையை மக்கள் அரசாங்கத்திற்கு வழங்கியிருப்பதால் அதற்கான பணிகளை முதற்தரமாக ஆரம்பிப்பதாக அவர் கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

நீதியமைச்சின் புதிய செயலாளராக என்னை நியமித்த ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் நன்றி கூறுகின்றேன். 'சௌபாக்கியத்திற்கான இலக்கு' என்கிற அரசாங்கத்தின் எண்ணக்கருவுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆணையை மக்கள் வழங்கியிருக்கின்றனர்.

விசேடமாக புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான எதிர்பார்ப்பும் காணப்படுகின்றது. மிகவும் கௌரவமாக மக்கள் வாழக்கூடிய வகையிலும் அதேபோல தேசிய பாதுகாப்பு உறுதியாகின்ற வகையிலும், நாட்டின் அபிமானம், கௌரவத்திற்கு முதலிடம் கொடுக்கின்ற, மனித உரிமைகளைப் பாதுகாக்கின்ற அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான பொறுப்பினை புதிய நாடாளுமன்றத்திற்கு மக்கள் வழங்கியிருக்கின்றனர்.

அதன்படி நீதியமைச்சின் முதலாவது பணியாக புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதாகும். மக்கள் எதிர்பார்க்கின்ற புதிய அரசமைப்பை உருவாக்குவதே தற்போதைய இலக்காக உள்ளது. அதேபோல நீதிமன்றக் கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், புதிய தொழில் நுட்பங்களை வழங்குதல், சட்டப்பிரிவை பலப்படுத்தல் என்ற பணிகளும் உள்ளன.

அனைத்து அரச நிறுவனங்களுக்கும் பணிகளைத் தொடர முடியாமல் உள்ள பழைமையான சட்டங்களைத் திருத்துவதும் அமைச்சின் பிரதான நோக்கமாகும். - எனவும் அவர் தெரிவித்தார்.

# கல்வி முறையில் மாற்றம் தொடர்பாக பீரிஸ் ஆய்வு!

நாட்டின் கல்வி முறையின் முன்னேற்றம் குறித்து மாகாண ஆளுநர்களுடன் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அண்மையில் கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின்போது தற் போதுள்ள பாடத்திட்டங்கள் மற்றும் கற்பித்தல் முறைகளைத்திருத்துவதற்கு அதிபர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், அரச அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளிடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

கொள்கைகளை வகுத்தல் மற்றும் செயற்படுத்துவதில் அரசாங்கத்தின் அணுகுமுறை வேறு என்பதனால், முடிவுகளை எடுப்பதற்கு முன் அனைத்து தரப்பினருடனும் ஆலோசனை நடத்தப்படுவதன் முக்கியத்துவம் குறித்தும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

மேலும், நாடு முழுவதும் 1,000 தேசிய பாடசாலைகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அத்தோடு இந்தக் கூட்டத்தில், பொருள் உள்ளடக்கம் மற்றும் வேலை வாய்ப்புகளுக்கிடையேயான தொடர்புகள், கல்விச் செயற்பாட்டின் பல்வேறு கட்டங்களில் தொழிற்கல்வித் திட்டங்களுக்கான அணுகுமுறையை உருவாக்குதல் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

### 128 கட்டு ஐயாயிரம் ரூபா நோட்டுகள்

# போலி நாணயத்தாள்களுடன் மூவர் வசமாக மாட்டினார்கள்!



முல்லேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வான பிரதேசத்தில் போலி நாணயத்தாள்களுடன் மூவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் விசேட அதிரடிப்படை தலைமையக அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, காரொன்று வழிமறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. இதன்போது சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளமையோடு, போலி நாணயத்தாள்களும் குறித்த காரும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் சந்தேகநபர்கள் முல்லேரியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

5,000 ரூபா நாணயத்தாள்கள் ஒரு பக்கம் மாத்திரம் அச்சிடப்பட்ட நிலையில், ஒவ்வொரு கட்டிலும் மேலேயும் கீழேயும் அச்சிடப்பட்ட பக்கங்களை வெளியில் தெரியுமாறு வைத்து அடுக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்ட 128 கட்டுகளே கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொருளொன்றைக் கொள்வனவு செய்வதற்காக சூட்சுமமாக இந்த நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுள்ளமை ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

முல்லேரியா, அங்கொடை, ஜா - எல பிரதேசங்களைச் சேர்ந்த 34, 36, 42 வயதுடைய சந்தேகநபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் முல்லேரியா பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மிக விரைவில் கைவிலங்குகளை உடைத்து வெளியே வருவேன் என்கிறார் பிள்ளையான்!

மிக விரைவில் கைவிலங்குகளை உடைத்து வெளியே வருவேன் என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளினால் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டவருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் 2015 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுவரும் நிலையில் கடந்த பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்புவாக்குகளைப்பெற்று அவர் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனடிப்படையில் எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடவுள்ள நிலையில் அதில் கலந்துகொள்ளுவதற்காக மட்டக்களப்பு மேல்நீதிமன்றில் நகர்வு மனு தாக்கல் செய்யப்பட்டு நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்றில் இருந்து சிறைச்சாலைக்கு சந்திரகாந்தனை கொண்டு செல்லும்போது ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த சந்திரகாந்தன் விரைவில் விலங்கினை உடைத்துவெளியில் வந்துஅனைவருடனும்பேசுவேன் எனத் தெரிவித்தார். இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில் நாளை நாடாளுமன்ற அமர்வில் சந்திரகாந்தன் கலந்துகொள்வார் என தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.08.2020 இல் வெளியிடப்பெற்றது.